Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 29 (11-02-94) வெள்ளிக்கிழமை ஓசை 358

## உணவுப் பொருள் எடுத்துவர கப்பல் கட்டணம் தொடரும்

யாழ்: குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிவரும் கப்பல் கட்டணங்கள் தொடர்ந்து பங்கீட்டுக்கு வழங்கப்படும் பொருள்கள் மூலம் பாவனையாளர்களிடமே அறவிடப்படும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். இவ்வாறான கப்பல் கட்டணம் இப் புதிய ஆண்டில் இருந்து அறவிடப்படமாட்டாது எனமுன்னர்யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தமை தொடர்பாக எமது செய்தியாளர் கேட்டபோதே மேற்படி பதிலை (10ஆம் பக்கம் பார்க்க)

### பொஸ்னிய தலைநகரில் இருந்து

# சேர்பியப் படைகள் பின்வாங்க

# பத்து தினங்கள் காலக்கெடு

## 'நேட்டோ' அமைப்பு விதிப்பு

[லண்டன்]

பொஸ்னிய சேர்பியத் துருப்புக்கள் சரஜீவோ நகரைச் சுற்றியுள்ள ஆயுத நிலைகளிலிருந்து பத்துநாள்களுக்குள் பின்வாங்க வேண்டும். அல்லாவிடில் விமானத் தாக்குதலை எதிர்பார்க்க வேண்டிவரும் என நேட்டோ எச்சரித்துள்ளது. இதேவேளை இது தொடர்பாக ஐ நா. பாதுகாப்புச் சபை அவசரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்று ரஷ்யா கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை சரஜீவோவில் அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தில் தனிப்பட்ட போர் நிறுத்தத்திற்கான காலக்கெடு ஒன்றை கொண்டுவருவதென பிரசெல்ஸ்சில் கூடிய 15 உறுப்பு நாடுகளின் தூதர்கள் முடிவு செய்தனர்.

பொஸ்னிய -சேர்பியத் துருப்புக்கள் தலைநகரை சுற்றிலுள்ள பீரங்கி படைகளை விலக்கிக் கொள்ள ஒப்புக்கொண்டதாக சரஜீவோவில் ஐ.நாவின் இராணுவ தளபதி ஒருவர் தெரிவித்தார். போரிடும் குழுக்கள் நேற்று பிற்பகலில் இருந்து போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பொஸ்னிய தகராற்றுக்குத் தீர்வுகாணும் விடயம் குறித்து முடிவு எடுக்கவேண்டியது ஐ. நா சபையின் வேலையே அன்றி நேட்டோ அமைப்பின் வேலை அல்ல என்று ரஷ்யாவின் முதல் துணை வெளியுற அமைச்சர் அனட்றோணி அடங்கிக்ஆவர்கள்ரஷ்யா செய்தி நிறுவனம் ஒன்றிடம் கூறியுள்ளார்

கிழக்கு தேர்தல் பிரசாரத்திற்கு

## எதிர்க்கட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தேர்தல் பிரசாரத்திற்கு ஆளும்கட்சியினர் செல்லும்போது அரசாங்கத்திற்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் பாதுகாப்புக் கருதி பாவிக்கப்படுகின்றன. ஆனால் எதிர்க்கட்சியினருக்கு இந்த வசதியில்லை என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி.யின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். கிழக்கில் நிலைமை மோசமாகவுள்ளது. இந்நிலையில் ஆளும் கட்சியினருக்கு வழங்கப்படும் போக்குவரத்து வசதி எதிர்க்கட்சிகளுக்கு இல்லை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் வெற்றிடங்களை உடன் அறிவிக்குக

(நல்லூர்)

கோட்டமட்டத்தில் இருக்கும் ஆசிரியர் வெற்றிடங்களை 1-2-94-ல் உள்ளவாறு பாடவாரியாக உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்து கடிதங்களை அனுப்பியுள்ளது.

மேலும் ஆசிரியர்கள் இடமாற்றம், இளைப்பாறுதல்களில் செல்வார்களாதலால் இவ்வாறு ஏற்படும் வெற்றிடங்களையும் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொருதடவை தமக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் பணிக்கப்பட்டுள்ளது. (17)

## பல்கலை. கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவு

யாழ். பல்கலைக்கழக கவுன்சில் உறுப்பினர்களாக ஏழு பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறு பேர் பழைய உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய உறுப்பினர்களில் திரு. சிவபாதசுந்தரம் நீக்கப்பட்டு அவருடைய இடத்திற்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்னாள் அதிபர் திரு. நாகரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் திரு. மாணிக்கவாசகர், சோமசேகரம் பிள்ளை, தேவசிகாமணி, டாக்டர் கணேசரட்ணம், முன்னாள் யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம், மேதகு சு. ஜெபநேசன் ஆகியோர் மீண்டும் உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இதேவேளை மேலும் ஓர் உறுப்பினர் வெற்றிடம் நிரப்பப்படாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பல்கலை. கல்லூரி

## பணிப்பாளர் நியமனத்தில் மாணவர்கள் நிபந்தனை

(யாழ்ப்பாணம்)

வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரிக்கு பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்தல் மேலும் தாமதமாகும் நிலை தோன்றியுள்ளதாக தெரியவருகின்றது.

வவுனியா பல்கலைக் கல்லூரிக்கு தகுதியான ஒருவரை பணிப்பாளராக நியமிக்குமாறு கோரி மாணவர்கள் பகிஷ்கரித்துவருகின்றனர்இதனால் மேலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

முழுநேரம் இயங்கக்கூடிய பல்கலைக் கழகத்தின் பின்னணியுடன் தொடர்புடைய ஒருவரே பணிப்பாளராக நியமிக்கப்படவேண்டும் என மாணவர் குரலெழுப்பிவருகின்றனர்.

## வீரச்சாவு



வீரவேங்கை சிந்து

யாழ்மாவட்டத்தில் கடந்த 8-ம் திகதி ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சிந்து (நவரத்தினம் சந்திரகலா- அளவாவேலாடை ஏழாலை தெற்கு சுன்னாகம்) இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

பொதுத் தேர்தலின் போது

## ஐ. தே. கவுடன் இணைந்து மக்கள் கட்சி போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா மக்கள் கட்சி எதிர்வரும் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப் போவதாக அறியவருகிறது.

தற்போதைய அரசு பிரேமதாசாவின் திட்டங்களை செயற்படுத்தும் வரை எமது கட்சியின் ஆதரவும் ஒத்துழைப்பும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் என்று சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் திரு. ஒஸி அபய குணசேகரா தெரிவித்துள்ளார்.

## விமானப் படைக்கு விமானிகள் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை விமானிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளது. புதிதாக கொள்வனவுசெய்யப்படவுள்ளவிமானங்களுக்காகவே விமானிகளை கோருகின்றது என செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானங்களின் தொகையுடன் தனது ஆள் தொகையையும் அதிகரிக்கவும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. சிறிலங்கா விமானப்படையியிடம் மாசெட்டி,

(10ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி குடியிருப்புகள் மீது குண்டு வீச்சு விமானம் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுநோட்டமிட்டது.

இக்குண்டுவீச்சு விமானம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பொலிகண்டிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது வட்டமிட்டு நோட்டமிட்டது. இப்பகுதிக்கு நேற்றுக் காலை 10.10 மணியளவில் வந்த சிறிலங்கா பொம்மர்விமானம் ஒன்று குடியிருப்புகள் மீது வட்டமிட்டது. அதன் போது உலங்குவானூர்தி ஒன்றும் இவ் விமானத்திற்கு உதவியாக வான்பரப்பில்இணைந்து வட்டமிட்டது. (யோ)

## எறிகணைவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று இரவு எறிகணை வீச்சுகள் நடைபெற்றன.

இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இவ் எறிகணை தாக்குதலை தொடர்ந்து அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதை நேற்றிரவு அவதானிக்க கூடியதாக இருந்தது.

# வரி விளம்பரம்


**'அப்பியாசக் கொப்பி'**

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள், அல்லது 25 மில்க்வைற் சலவைப்பவுடர் வெற்றுப் பக்கற்றுகள் எம்மிடம் சேர்ப்பித்தால் ஒரு அப்பியாசக் கொப்பி வழங்கப் படும். - மில்க்வைற் (சி-8601)

**சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு**

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக் குண்டு, "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7488)

**இன்று சனி மாற்றம்**

(11-2-94) இன்று வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் சனி பகவான் கும்ப ராசிக்கு மாற்றமடைகின்றார். சனி மாற்றம் ரூ 10/- எங்கும் விற்பனையாகின்றது. V. பாலா சோதிட நிலையம், புத்தகசாலை, இணுவில். (7474)

**இன்று சனீஸ்வரன் மாறுகின்றார்**

விற்பனையாகிறது. 'விண்ணில் சனிமாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன்' - வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7491)


## 1000வீதி விளக்குகள் அமைக்க திட்டம்

(குருநகர்)

இவ்வாண்டு நிறைவடைவதற்குள் யாழ். மாநகர சபை 1000 வீதி விளக்குகளைச் சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற் கட்டமாக ஜூன் மாதத்திற்குள் 500 வீதி விளக்குகள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென்றும் இச்சேவைக்காக ரூபா 5லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது 285 வீதி விளக்குகள் சேவையில் உள்ளதாகவும் அவற்றில் 43விளக்குகளை விசமிகள் சேதப்படுத்தி இருப்பதாகவும் யாழ். மாநகரசபை செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. (21)


**COMPUTER**
**கல்வி**

Basic Language
திங்கள், புதன்
10-30 — 12-30
ஆரம்பம்: 14-02-94

LOTUS 1-2-3
செவ்வாய், வியாழன்
2-30 — 4-00
ஆரம்பம்: 15-02-94

C. I. M. A., I. A. B., Short-Hand & Typing வகுப்புகளும்
வெள்ளி: 11-02-94
நடைபெறுகின்றன.
உறுதியான கல்வியைப் பெற

***School Of Business Administration***
16, 3rd Cross Street
JAFFNA. (சி-8598)

## உடன் தேவை

இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட அனுபவம் வாய்ந்த

1) தேநீர் தயாரிப்பாளர் (ரீ மேக்கர்)
2) ரொட்டி தயாரிப்பாளர்
3) பரிசாரகர் (சப்பிளையர்)

தகைமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்

12-02-94 காலை 9-00 மணிக்கு
நேரில் வரவும்

**சுவையருவி**
**மின்நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(இ-8599)


## ஏல விற்பனை
## வெற்றுப் பலகைப் பெட்டிகள்
### கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தில் பாவனைக்குகந்த வெற்றுப் பலகைப் பெட்டிகள் ஒரு தொகை 1994-02-16 ஆம் திகதி காலை 10, 00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 10, 00 மணிக்கு கல்வித் திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும் படி வேண்டப்படுகிறீர்கள். மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றைய தினம் காலை 9. 00 மணிக்குக் களஞ்சியக் கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாகப் பணத்தினை கணக்காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற்றினை பெற்றுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**யாழ். கல்விப் பணிப்பாளர்.**

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
09 - 02 - 1994 (சி| 8597)

## நிலைத்த நினைவில் மூன்றாம் மாதம்



**லெப்டினனட் நெடுஞ்செழியன்**
(தாமோதரம்பிள்ளை குலரட்ணம்)

மகனாக: 22-01-1975 | மாவீரனாக: 11-11-1993

திதி:
11-02-1994

ஒப்பரேஷன் தவளை வெற்றி முரசுடன்
தொடுவான் திக்கெங்கும் தவழ
நெடுந்தோள் கொடுத்த நெடுஞ்செழியன்
உன் உதிரம் தமிழீழ விடியலின் வரவுக்கு
கோலம் போட்டிருக்கிறது
உன் உருவம்
என்றும் எம் மனதில்
அழித்து வரையாச் சித்திரமாயிருக்கிறது

பூநகரி, நாகதேவன்துறை கூட்டுப்படைத்தளத் தகர்ப்பில் இவருடன் வீரச்சாவடைந்த அனைவருக்கும் எமது வீரஅஞ்சலிகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (7489) – குடும்பத்தினர்

## 93ஆம் நாள் 1ஆம் ஆண்டு
## நினைவு அஞ்சலி





| லெப்டினன்ட் **மாவாணன் (கவி)** (வேலு சங்கர்) | 2-ம் லெப். **காயத்திரி** (கோவிந்தன் தவச்செல்வி) |
|---|---|
| 30-7-1975 | 29-12-1975 |
| பூநகரி மண் மீட்பில்: 11-11-1993 | தாயக மண்ணில்: 23-11-1992 |

<தாயின் மடியில்>

பறவைகள் ஒலமிடுகின்றன அந்தோ!
கீழ்வானம் சிவக்கின்றது
உங்கள் கனவு நினைவாக
விடியலுக்கு நேரம் வந்து விட்டது
புறப்படுவோம் நாம்!

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

ஊறணி குடியேற்றம்,
வல்வெட்டித்துறை. (7481) - குடும்பத்தினர்.

## நினைவு கூருகின்றோம்..
## 1994-02-11

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-இலுப்பையடிச்சேனை பகுதியிற் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**வாணன்** (பன்குடாவெளி மட்டு)

**பாலன்** (இலுப்பையடிச்சேனை-மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (யாழ்-பாலைதீவுக்கும், இரணைதீவுக்குமிடையே-சோளகம் என்ற இடத்தில்) சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகு மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்ட 06 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ்-கட்டுவன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**வெள்ளை | குரு** (எமிலியான் மெண்டிஸ் நெல்சன் றெஜினோல்ட்-செம்பியன்பற்று வடக்கு-யாழ்)

**லிங்கம் | அம்முனி** (பரமசாமி அமிர்தலிங்கம்- கந்தரோடை, சுன்னாகம் - யாழ்)

1989-ம் ஆண்டு மட்டு-கோப்பாவெளிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அசோக்** (முத்துலிங்கம் மரியதாஸ் பெரியபுல்லுமலை - மட்டு)

1991-ம் ஆண்டு அம்பாறை-அக்கரைப்பற்று பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கலா** (அக்கரைப்பற்று-அம்பாறை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992-ம் ஆண்டு திருமலை-மூதூர் 64-ம் கட்டையிலிருந்து பெரியபாலம் நோக்கி சென்று கொண்டிருந்த மக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட கூனித்தீவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1993-ம் ஆண்டு திருமலை-மூதூர், கொட்டாளிவான் சந்திப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய,

**ஈழவன்** (காளியப்பு சிவராசா-9-ம் வட்டாரம், மூதூர்-திருமலை)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8595)

# உலக தலைவிதியை தலைகீழாக்க முயலும் பொருண்மிய மாற்றத்தில் நவமுதலாளியம்

பொருண்மிய நலன்களே இனிவரும் காலத்தில் உலகில் முதன்மைப்படுத்தப்படும் என ஆய்வாளர்கள் இப்போதே எதிர்வு கூறத் தொடங்கி விட்டார்கள் இப்போது உலகெங்கும் பொருண்மியக் கட்டமைப்புகளை கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்தல், நவீன மயமாக்கல். தடையற்ற சருவதேச வணிகம் என்கிற சுலோகங்களே மிகக் கவர்ச்சிகரமாக முன்வைக்கப்படுகின்றன. நாடுகள் அவற்றின் எல்லைகள் என்பது இப்போது நவீன முதலாளியத்திற்கு ஒரு பொருட்டல்ல. சொந்த நாட்டில் சூழல் மாசுபடல் தொடர்பான தரக் கட்டுப்பாடுகள் கடுமையாக இருந்தால்- தொழிலாளர் வேதனம்உயர்வாகஇருந்தால் தனக்கு வாய்ப்பான இன்னொரு நாட்டிற்கு மூலதனம் நகர்த்தப்படுதல்இப்போதுவழமையாகிவிட்டது. இப்போது ஒரு புதிய பொருண்மியச் சூழல் உலகெங்கும் உருவாகி வருகின்றது. குறிப்பிட்ட பிராந்தியங்களில் நாடுகள் தமக்கிடையில் தடையற்ற வணிகப் பிரதேசங்களை இப்போது உருவாக்கிவருகின்றனர். தென்கிழக்கு ஆசியப் பகுதியில் 'ஆசியான்' அமைப்பு மேற்கைரோப்பாவில் ஐரோப்பிய சமூகம் (இவர்கள் இப்போது தம்மை ஐரோப்பிய ஒன்றியம் European Union (E.U) என அழைக்கின்றனர்) இவை ஏற்கனவே உள்ளன.

இப்போது இன்னொரு பரந்த வணிகப் பகுதியொன்று உருவாகிவிட்டது. அமெரிக்கா கனடா, மெக்சிக்கோ என்பன ஒன்று சேர்ந்து 'நப்தா' எனப்படும் வடஅமெரிக்க சுதந்திர வணிக உடன்பாடு ஒன்றை அண்மையில் உருவாக்கினர் (NAFTA - NORTH AMERICAN FREE TRADE AGREEMENT) மெக்சிக்கோவின் புதிய சந்தை வாய்ப்பு அங்குள்ள குறைந்த வேதனத்தில் பெறக்கூடிய தொழிலாளர் தொகுதி என்பன அமெரிக்க தொழிலாளர்இவ் உடன்பாட்டிற்கு காட்டிய கடும் எதிர்ப்பையும் கிளின்டனை புறக்கணிக்கச் செய்தது. ஏற்கெனவே பொருண்மிய சரிவால் வேலையற்றுப்போகும் அமெரிக்க தொழிலாளர் இவ்வுடன்பாட்டால் மெக்சிக்கோவின் தொழிலாளர் தமக்கு மேலும் தீங்கினை விளைவிப்பர் என்று கருதுகின்றனர். இப்போது மேற்குலகிலே மெல்ல மெல்லதொழிற் சங்க அமைப்புக்கள் தம்மை நிலைப்படுத்தி தமது உரிமைகள் குறித்து கவலைப்படத் தொடங்குவதாக தெரிகின்றது.

இதேவேளை பெரும் மூல வளங்களும் விரிந்த சந்தையும் கொண்ட ஆசி-பசுபிக் பிராந்தியத்திலும் இத்தகைய முறைமை ஒன்றை உருவாக்க அமெரிக்கா முயல்வதாக தெரிகின்றது. சென்ற நவம்பர் மாதத்தில் 'ஏபெக்' எனப்படும் ஆசிய-பசிபிக் பொருளாதார கூட்டுறவு அமைப்பின் வருடாந்த மாநாடு வெகு பரபரப்பாக நடைபெற்றது. (APEC-ASIA PACIFIC ECONOMIC CO-OPERA TION) அமெரிக்கா, சீனா, யப்பான், கனடா, அவுத்திரேலியா ஆசியான் நாடுகளின் தலைவர்கள் ஒன்றாக கூடி தமக்கிடையில் வணிகத்தை பெருக்குவது பற்றி கலந்தாலோசித்தனர். இப்போது அமெரிக்கா மிகத் தெளிவாகவேஇப்புதியபோக்கினைபிரதிபலிக்கின்றது. சனாதிபதி பில்கிளின்டனோ ஆசிய பசுபிக் பகுதி பொருண்மிய வளர்ச்சியோடுதான் இணையாது வெறுமனே இப்பகுதியின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவோ பொருண்மிய உறுதிப்பாட்டிற்கு உதவவோ தயாராக இல்லை என்றார். இதன் பொருள் என்னவென்றால் இப்பகுதியின் சந்தைகள் மேலும் அமெரிக்க பொருட்கட்கு இலகுவாக்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

இவை எல்லாவற்றின் உச்சமாகவே இப்போது சருவதேச வணிகத்தினை மேலும் ஊக்குவித்து உலகப் பொருண்மிய வளர்ச்சியை தூண்டுவதற்கு கடந்த டிசம்பர் மாதம் ஜெனிவாவில் கைச்சாத்தான புதிய சருவதேச வணிகம் தொடர்பான உடன்பாடு அமைவதாக கருத்துக்கள் மேற்குலகால் முன்வைக்கப்படுகின்றன. இக் கருத்துக்களை காவிச் செல்லும் ஊடகங்களாக இப்போது உலக வங்கி, சருவதேச நாணய நிதியம், கற் எனப்படும் தீர்வைகள் வணிகம் தொடர்பானபொதுஉடன்பாடுGATT -General Agreement on Tariffs and Trade) என்கிற ஐ.நா. வின் அமைப்புக்கள் பயன்படுகின்றன. ஆனால் சில பொருளியல் ஆய்வாளர்களோ கடந்த 10 ஆண்டுகளாக பெரும் பொருண்மிய மந்த நிலைக்குள் சிக்கியிருக்கும் உலகமுதலாளியர்களான அமெரிக்க, ஐரோப்பிய சமூகம் இப்போது இறுதியாக யப்பானும் தாம் மீள்வதற்காக- புதிய சுற்று தீர்வைக் குறைப்புக்கள், புதிய சந்தைகள் அவசியம் தேவைப்படுதலாலே இப்புதிய உடன்பாடு எட்டப்பட்டதாக கூறுகின்றனர்.

இப்புதிய உடன்பாட்டின் தாக்கங்கள் பற்றி பார்க்க முன் சற்று பின்நோக்கிப் பார்ப்பது அவசியமாகின்றது. 1990களின் பின் உருவாகியிருக்கும் புதிய உலக ஒழுங்கின் வெளிப்பாடாகத் தோன்றும் இப் புதிய உடன்பாட்டின் முன்னைய வரலாறு அப்போதே அறியப்படமுடியும் இரண்டாம் உலகப் போரின் பின் குடியேற்றவாதம் மறையத் தொடங்க- ஏகாதிபத்திய சக்திகள் வலுவிழக்க புதிய மாற்றுப் பொருண்மிய முறையாக சோசலிச முறை தோற்றம் பெற - முதலாளிய பொருண்மிய முறையைக் காப்பாற்ற மீட்டெடுக்க - ஒழுங்குபடுத்த ஐ.நாவினால் உலகவங்கி, சருவதேச நாணய நிதியம், GATT போன்றவை உருவாக்கப்பட்டன. கற் உருவாக்கப்பட்டபின் உலக வணிகத்தை ஒழுங்கு படுத்த அதன் முதல் மாநாடு 1947-ம் ஆண்டே கூட்டப்பட்டு அவ் ஆண்டே முடிந்தது. அப்போது 23 நாடுகள் மட்டுமே பங்கு பற்றின. அப்போது 40வீதமாக சராசரி இருந்த ஏற்று,இறக்குமதித் தீர்வைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு இப்போதைய உருகுவே சுற்று மாநாட்டில் அதனை 3 வீதமாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனவே இப்போது கிழக்கு ஐரோப்பாவின் மாற்று பொருளாதார முறைமை வீழ்ச்சி கண்ட நிலையில் மீண்டும் புதுவடிவில் அமெரிக்க மேலாதிக்கத்தின் கீழ் நவீன மயமாக்கல், தாராளமயமாக்கல் முகமூடியோடு சருவதேச மூலதனம் புதுக்குடியேற்ற வாத நிலைப்பாடு ஒன்றை எட்டுவதாக அதன் தோற்றமாகவே இப்புதிய உடன்பாடு அமைவதாக மூன்றாம் உலக பொருளியலாளர் பலர் இப்போது முறையிடுகின்றனர். எனவே மேற்குலகம் அமெரிக்க நியுகாம்ஸ் சயர் மாநிலத்தில் பிரெற்றன் வூட்ஸ் (Brettonwoods) இடத்திலமைந்துள்ள உலக வங்கி, சருவதேச நாணய நிதியத்தின் 50 வருட நிறைவினை இவ் வருடம் கொண்டாட முற்படும்போது மூன்றாம் உலகம் மூக்குடைபட்டு இப்போது தனித்து நிற்கின்றது.

இப் புதிய உடன்பாட்டின் ஏற்பாடுகள் மிகப் பரந்தவை இதுவரை காலமும் உள்ளடக்கப்படாத பல துறைகளையும்உற்பத்திசாராத அதேசமயம் மிகப் பாரியளவில் வணிகம் நடைபெறும் சேவைத் துறையும் (Services) இவ் உடன்பாடுகள் முதல் தடவையாக வருகின்றது. கடந்த டிசம்பர் மாதம் 15ம்- திகதி ஜெனிவாவில் கைச்சாத்தான இவ்வுடன்பாடு கடந்த 7 வருடங்களாக - 1986ஆம் ஆண்டிலிருந்தே 116 நாடுகள் பெரும் விவாதங்கள் - பெரும் இழுபறிகள் - என முட்டி மேதி இறுதியில் GATT அமைப்பின் மேற்பார்வையில் 400 பக்க உடன்பாட்டினை எட்டினர். அடுத்த நூற்றாண்டின் தலைவிதியை தீர்மானிக்கத் தக்க வகையில் வரையப்பட்டுள்ள இவ்வுடன்பாடு (1) ஏற்றுஇறக்குமதி தீர்வைகள் 1/3 பகுதியாகசராசரி 30-40வீதமாக குறைந்தது; (2) இப்போது விவசாயத் துறையும் இவ் உடன்பாட்டிற்குள் கொண்டு வரப்படுகின்றது. இதன்படி வளர்ச்சியடைந்த நாடுகளான, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இதுவரை காலமும் தமது விவசாயிகட்கு வழங்கிய மானிய உதவிகளையும் தம்மால் ஏற்றுமதி செய்யப்படும் உணவுப் பொருட்கட்கும் வழங்கும் மானிய உதவிகளையும் குறைத்தல் வேண்டும்; இதன்படி உள்ளூர் விவசாய மானியங்கள் ஏறத்தாழ 20 வீதத்தாலும் ஏற்றுமதி மானியங்கள் 36 வீதத்தாலும் குறைக்கப்படல் வேண்டும். அதேசமயம் அநேக நாடுகள் குறைந்தது 3 (மூன்று) வீதமாவது தமது உள்ளூர்சந்தையை இறக்குமதி உணவுப் பொருட்கட்கு திறந்து விடப்படல் வேண்டும்; 3) விவசாயத் துறையைப் போலவே முதல் தடவையாக சேவைத் துறையும் (Services Sector) இவ்வுடன்பாடு வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது; (4) அத்தோடு வளர்ந்த மேற்குலக நாடுகட்கே பெருத்த வாய்ப்பாக பெரும் காப்பு முறையொன்று வணிகக் குறிகள் (Trade marks), ஆக்கியோர் உரிமைகள், ஆய்வு, கண்டுபிடிப்பு உரிமைகள் (Patents) போன்றவற்றை உள்ளடக்கிய அறிவுடைமையாளர் சொத்துடமை என்ற பெயரில் கொண்டு வரப்பட்டுள்ளது (IntellectualProperty); (5) மேலும் உடுபுடவைகள், துணிமணிகள் தொடர்பான தற்போதைய இரு தரப்புப் பங்கீட்டு முறைகள் 10 வருடத்தின் பின் நீக்கப்படும். அதன் தீர்வைகளும் இவற்றிற்கு குறைக்கப்படும்;(6) இவற்றோடு வணிகப் பிணக்குகளைத் தீர்க்க விரிவான ஏற்பாடுகள்; கப்பல் போக்குவரவு, சுங்கத்துறை நடைமுறைகள், கழிவுகளை அகற்றல் போன்றவை தொடர்பாகவும் பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்போது இப்புதிய முறைமையை மேற்பார்வை செய்ய நடைமுறையிலிட GATT அமைப்புக்குப் பதிலாக W.T.O எனப்படும் சருவதேச வணிகத் தாபனம் (World Trade Orgnisation) புதிதாக அமைக்கப்படவிருக்கின்றது. இவ்வாறாக உலகின் தலைவிதியையே தலைகீழாக மாற்றும் வகையில் பொருண்மிய மாற்றங்கள் எம்மை எதிர்நோக்கியுள்ளன. இம்முடிவுகள் எடுக்கப்பட்டாலும் இவை தொடர்பான கருத்து மோதல்கள், எதிர்ப்பலைகள் மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமல்ல மேற்குலகிலும் தொடர்கின்றன. குறிப்பாக விவசாயத் துறையில் மிக நவீன மயமாக்கலை பின்பற்றும் அமெரிக்காவோடு சமமற்ற போட்டியொன்றுக்குள் தாம் தள்ளப்பட்டு விட்டதாக பிரான்சின் விவசாயிகள் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். இது போலவே அவுத்திரேலியா, ஆர்ஜென்டைனா போன்ற விவசாயம் சார் நாடுகள் திக்கித் திணறுகின்றன. யப்பான் தென்கொரியாவிலோ அரிசி இறக்குமதிக்குத் தமது சந்தையைத் திறப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு. அதுபோலவே உற்பத்தி சாராத சேவைத் துறையிலும் பல சமமற்ற அநீதியான போட்டிகளைச் சந்திககநேரிடும் என ஐரோப்பிய நாடுகளே அஞ்சுகின்றன. குறிப்பாக திரைப்பட வீடியோத் தொழிலில் அமெரிக்க மேலாதிக்கம் குறித்து அச்சம் தோன்றியுள்ளது. ஏனென்றால் இப்போதே வருடாந்தம் மூன்றுபிலியன் டொலர்பெறுமதியான திரைப்படங்கள் வீடியோப்படங்கள் ஐரோப்பாவிற்கு அமெரிக்காவால் ஏற்றுமதியாகின்றன. பொதுவாகவே அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகட்கும் இடையே இவ்வாறான பல முறுகல் நிலைகள், போட்டா போட்டிகள் நிலவியபோதும் அமெரிக்கா மூர்க்கத்தனமாக இவ்விடயங்களில் நிற்பதால் பெரும் கசப்புகள் தோன்றியுள்ளன. எனினும் இறுதியில் உடன்பாடு எட்டப்படாவிட்டால் தமது பிறநலன்கட்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் விட்டுக்கொடுப்புக்கள் நடந்தன. இவ்வாறாக மேற்குலகம்தத்தம்நலன்களை பாதுகாக்கும் முகமாக தாங்கள் எத்துறைகளில் பலமாக உள்ளனரோ அங்கு தாராளமயமாக்கலையும் எத்துறைகளில் பலமற்று உள்ளனரோ அத்துறைகட்கு காப்பு ஏற்பாடுகளையும் கடைப்பிடித்து போட்டாபோட்டி போடுகையில் மூன்றாம் உலக நலன்கள் ஒரு மூலைக்கு தள்ளப்பட்டன,

மூன்றாம் உலக நாடுகட்கும் பயன்கள் கிட்டும் எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில் நிலைமை வேறாகவேயுள்ளது. உலக வருவாய் புதிய ஏற்பாட்டின்படி 217-274 பில்லியன் டொலர் அளவு வருடாந்தம் அதிகரிக்கும்என உலக வங்கி கூறுகின்றது. ஆனால் இவற்றால் பயன் பெறப்போவது ஐரோப்பா, அமெரிக்கா, யப்பான், சீனா எனபலமுள்ளநாடுகளேயன்றி ஏனைய வளர்முக நாடுகள் 10வீதத்திலும் குறைவாகவே பயன்பெற முடியும் என தெரியவருகின்றது. இத்தோடுஇன்னொரு பெருத்த ஆபத்தையும் மூன்றாம் உலக நாடுகள் இப்போது எதிர்நோக்க நேரிட்டுள்ளது. அறிவுடமையாளர் சொத்துடமை காப்பு ஏற்பாடுகளின்படி மேலைத்தேயபல்தேச வணிக நிறுவனங்கள் பெரும் பயன் அடையும் அதேவேளை தலைமுறை தலைமுறையாக கீழைத்தேயங்களில் விவசாயிகள் பயன்படுத்தும் நுட்பங்களை இனிமேல் தம்முடையது என உரிமை கொண்டாடத் தடைஏற்படப் போகின்றது. ஆய்வுகூடங்களில் பல தடவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நிருபிககப்பட்டவற்றையே நுட்பமாக கருத முடியும் என்றும் அவ்வாறு அற்றவை இயற்கைத் தழுவியவையாகவே கருதப்படும் என்கிற அவல நிலை தோன்றுகின்றது. இது அநீதி என மூன்றாம் உலக விவசாயிகள் பெரும் எதிர்ப்பினைக் காட்டிவருகின்றனர் குறிப்பாக இந்தியாவின் பல மாநிலங்களிலே இந்திய அரசு இவ்வுடன்பாட்டை ஏற்றதற்கு எதிராக கடும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன அண்மையில் கர்நாடகத்தில் 5 இலட்சம் விவசாயிகள் புதிய உருகுவே உடன்பாட்டினை தீயிலிட்டனர். இது ஒருவகை உயிரியல் குடியேற்றவாதம் என ஆய்வாளர் (Biological Colonialism) அழைக்கின்றனர் சுருக்கின் மூன்றாம் உலக நாடுகள் தமது பொருண்மியங்கட்கு மேலான கட்டுப்பாடுகளை இழக்கும் வண்ணம் தமது இறைமையை அடகு வைத்து விட்டதாக கடும் கண்டனங்கள் எழுகின்றன.

இவை ஒரு புறமிருக்க ஏற்கனவே பெரும் கடனாளிகளாக இருக்கும் 3-ம் உலக நாடுகள் இப் புதிய நவீனமயப் போட்டியில் எவ்வாறு வெற்றிபெற முடியும்? 1992ம் ஆண்டு 3-ம் உலகம் உலக வங்கிக்கு 1500 பிலியன் டொலரை செலுத்தவேண்டியிருந்தது. எனவே இவற்றின் குடுமிகள் உலக வங்கியின் பிடியில் இருப்பதால் அவர்கள் பணிப்பது போல் புதிய மாற்றங்களைதமதுபொருண்மிய கட்டமைப்பில் இவர்கள் செய்ய வேண்டும் SAP எனப்படும்(Structural Adjustment Programmes) திட்டத்தின்படி கடனாளி நாடுகள் தமது நுகர்வுச் செலவினை குறைத்து,கல்வி சுகாதாரம் போன்ற பொதுநல சேவைகளில் பெரும் வெட்டு செய்து, தமது வளங்கள் யாவற்றையும் ஏற்றுமதியாகும் முதன்மைப் பொருட்கட்காக மீள் நெறிப்படுத்த வேண்டும். இதன்பயனாக இன்று 30 உலக நாடுகளில் ஏற்றுமதிக்கான உற்பத்திப் பொருள்கள் மிகவதிகரித்து அதனால் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. அத்தோடு பாரம்பரிய விவசாயக் கட்டமைப்பு சீரழியவும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டு புள்ளிவிபரங்கள் இவ்வாறாகக் கடன்பட்ட ஆபிரிக்க நாடுகள் சில தமது கல்வியில் 25 வீத வெட்டினையும், சுகாதாரத்தில் 50 வீத வெட்டினையும் ஏற்படுத்த நேரிட்டது. இதன் பயன் 1982 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் உலகில் வருடாந்தம் 60 இலட்சம் 5 வயதிற்குட்பட்ட சிறார்கள் மடிந்து வரு

(8ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

## அதிகாரிகள் அசிரத்தையால்

# யாழ். குடாநாட்டை ஆக்கிரமிக்கும் மலேரியா

யாழ். குடாநாட்டில் வசிக்கும் மக்களில் 2.5 சதவீதமானோர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு மேற்கொண்ட ஆய்வுகள் கூறுகின்றன: எனினும் இப்புள்ளி விபரம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல எனவும் 7.5 சதவீதமான மக்கள் யாழ். குடாநாட்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் உலக சுகாதார ஆலோசகரான டாக்டர் தேவசகாயம் கொழும்பில் நடைபெற்ற மலேரியா தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ் குடாநாட்டின் குறிப்பிட்ட பகுதியில் இருந்து மலேரியா இரத்தப் பரிசோதனைக்கென யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பல இரத்த மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமலேயே அழிக்கப்பட்டமை இவருடைய கூற்றை உறுதிப்படுத்துமாப் போல் உள்ளது.

யாழ். குடாநாட்டில் இன்று மிகவேகமாக பரவிவரும் நோயாக மலேரியா காணப்படுகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையானது வருடாவருடம் ஏறத்தாழ 50 வீதத்தினால் அதிகரித்துச் செல்கின்றமையை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. நூற்றுக்கணக்கானநோயாளர் நாளாந்தம் மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளனர்.

இதேவேளை மலேரியாப் பிரதேசமாக கணிக்கப்பட்டு வந்த வன்னிப் பிராந்தியத்தில் அங்குள்ள சுகாதார அதிகாரிகள் இந்நோய் குறித்து ஓரளவு சீரான கவனம் செலுத்தியுள்ளமையினால் அங்கு மலேரியா நோயின் தாக்கம் குறைந்து வருவது கவனிக்கத்தக்கது (அட்டவணையைப் பார்க்கவும்)

யாழ். குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதற்கு முக்கிய காரணமாக இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனக்குறைவே காரணமாக உள்ளது. மலேரியாவின் தீவிரத்தை அவர்கள் உணர்ந்துள்ள போதிலும்கூட யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனை அதிகாரிகள் இதனைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சிரத்தை கொள்பவர்களாக இல்லை.

மலேரியா பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கையிலோ, மலேரியாவைக் கட்டுப்படுத்த மக்கள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் குறித்து விளக்குவதற்கோ இவர்கள் அக்கறை கொண்டிருப்பதாக தெரியவில்லை. மலேரியா பரவிவரும் பிரதேசங்களை இனம் கண்டு அங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் மலேரியாவுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபடுவதிலும் இவர்கள் அக்கறை காட்டுவதில்லை.

மலேரியா நோயை தோற்றுவிக்கும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான மருந்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள தவறியமைக்கு இவ் அதிகாரிகளின் அக்கறையின்மையே காரணம் என சுட்டிக்காட்டப்படுவதையும் இங்கு கவனிக்கவேண்டியுள்ளது.

மலேரியா நுளம்பை ஒழிக்கப் பயன்படும் 'ஐக்கன்' எனும் நவீன மருந்தைப் பெற்றுக்கொள்ள இவர்கள் பெருமுயற்சி எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இம் மருந்தினை அனுப்பி வைக்கும்படி இவர்கள் ஆரம்ப காலத்தில் கோரிக்கை விடுத்தபோது அது அரசாங்கத்தினால் மறுக்கப்பட்டது உண்மை தான். ஆனால் பின்னர் இம் மருந்தின் அவசியம் குறித்து வலியுறுத்தப்படாமையுடன் இம் மருந்தை அனுப்பிவைக்கும்படி கோரிக்கை கூட விடப்படவில்லை. இம் மருந்தினைப் பெற ஏன் இவர்கள் முயலவில்லை என்பது இன்னமும் ஒரு புதிராகவே உள்ளது. ஆரம்ப காலங்களில் தடை விதிக்கப்பட்ட சில பொருள்கள் பின்னர் அனுமதிக்கப்பட்டமையையும் இங்கு கவனத்திற் கொள்ளவேண்டும். இம் மருந்தின் முக்கியத்துவத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்துவதன் மூலம், பகுதியாகவேனும் இம் மருந்தினைப் பெற்றிருக்க முடியும்.

இதேவேளை நுளம்பினைக் கட்டுப்படுத்தப் பயன்படும் மலத்தியோனை தேவையான அளவு பெற்றுக்கொள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், மற்றும் கூட்டுப்படைத் தலைமைச் செயலகத்தின் அனுமதி கிடைத்திருந்த போதும் கூட யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பணிமனை அதிகாரிகளிடையே ஏற்பட்ட இழுபறி நிலையினால் தேவையான அளவு மலத்தியோன் யாழ். குடாநாட்டிற்குக் கொண்டு வரப்படவில்லை. சென்ற

**குமணன்**

வருடம் யாழ். குடாநாட்டிற்குத் தேவையான மலத்தியோனில் அரைப்பங்கிற்கும் குறைவாகவே எடுத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம் மலத்தியோனை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் கொள்கலன் விடயத்தில் பண மோசடி இடம் பெற்றதாகக் கூட செய்திகள் வெளிவந்துள்ளன.

சென்றவருடம் மலத்தியோன் எடுத்து வருவதில் ஏற்பட்ட தடங்கலுக்கு யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகரின் செயல்களே காரணமாக அமைந்தன. கடந்த மே மாதத்தில் 130 பிளாஸ்ரிக் கொள்கலன்கள் மூலம் மலத்தியோன் எடுத்து வரப்பட்டிருந்தது. மேலதிக கொள்கலன்களை கொழும்பில் கொள்வனவு செய்ய போதிய பணத்தை மலேரியா தடுப்பு இயக்கம் வழங்க மறுத்ததை அடுத்து இங்கு எடுத்து வரப்பட்ட பிளாஸ்ரிக் கொள்கலன்களை விற்பனை செய்வது எனவும், அதன் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டு புதிய கொள்கலன்களை கொழும்பில் கொள்வனவு செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் இக்கொள்கலன்கள் கொள்வனவு செய்யப்பட்டதிலும் மிகஅதிக விலைக்கு - ஒருலட்சத்து 16 ஆயிரம் ரூபாவிற்கு - இங்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் இவற்றை 1993 ஜுலை மாதத்தில் விற்பனை செய்து முழுப்பணத்தையும் பெற்றுக்கொண்ட யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் கொள்வனவு அதிகாரியிடம் இத்தொகை காசோலையாக நவம்பர் மாத மளவிலேயே ஒப்படைத்துள்ளார். இவ்வாறான தாம

வீரியமிக்க மருந்துகளைப் பாவிக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும், யாழ். குடாநாட்டில் மலேரியா நோய் அதிகரித்துக் காணப்படுகின்ற போதிலும் கூட மலேரியா நோயினால் எவரும் இறக்கவில்லை என சுகாதாரப் பிரிவினர் கூறுகின்றனர். எனினும் இதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது என வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். ஏனெனில் பொதுவாக இவ்வாறான நோய்களினால் ஏற்படும் மரணங்கள் தொடர்

கொண்டிருக்கின்றார்கள்.

மலேரியாநோய் தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் மலேரியாப் பிரதேசங்களைப் பாகுபடுத்தி இரத்தப்பரிசோதனை செய்து உண்மை நிலைமையைக் கண்டறிந்து தகுந்த பதில் நடவடிக்கைகளாக மேற்கொள்வதன் மூலம் ஏனைய பகுதிகளுக்கும் பரவாது தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இரத்தப்பரிசோதனை ஆய்வு கூடத்தினை இந் நெருக்கடியான காலகட்டத்தில் அதி

### கடந்த மூன்று ஆண்டுகளில் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் மலேரியாவால் பீடிக்கப்பட்டோர் விபரம்

| | யாழ். மாவட்டம் | | | கிளிநொச்சி மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | சாதாரண மலேரியா | மூளை மலேரியா | மொத்தம் | சாதாரண மலேரியா | மூளை மலேரியா | மொத்தம் |
| 1991 | 5366 | 501 | 5867 | 15023 | 2470 | 17493 |
| 1992 | 11774 | 985 | 12759 | 9919 | 1098 | 11017 |
| 1993 | 14939 | 1221 | 16160 | 4299 | 252 | 4551 |

தத்திற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை, போக்குவரத்து வசதியின்மை என்பவற்றினால் ஜனவரி மாதமளவிலேயே மலத்தியோனை கொள்வனவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன இவ்வேளையிலும் கூட கொழும்பில் போதியளவு மலத்தியோன் கையிருப்பில் இல்லாமையினால் கொள்வனவு மேலும் தாமதப்படவேண்டியிருந்தது.
இது குறித்து பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகும் அதிகாரிகள் இதனால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து உணர்வதாகத் தெரியவில்லை. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்ட மலத்தியோன் பிரயோகத்தினால் அங்கு மலேரியாவின் தாக்கம் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று மலேரியா நோயினால் பாதிக்கப்படும் பிரதேசங்கள் நீர்நிலைகளை அதிகமாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. மலேரியாவைப் பரப்பும் நுளம்புகள் நீர்நிலைகளில் இடும் முட்டைகளை ஆரம்பப்படியிலேயே அழித்துவிடுவதன் மூலம் இந் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும், இதற்குப் பயன்படும் Temiphos எனும் மருந்தினைக் கொள்வனவு செய்வதில் சுகாதார அதிகாரிகள் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை.

இதேவேளை நுளம்புப் பெருக்கமானது யாழ். குடாநாட்டில் இம்முறை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. மலேரியாவினைப் பரப்புவது ஒருபுறமிருக்க இந் நுளம்புத் தொல்லையினால் மக்கள் தூக்கமற்ற நிலையில் இரவைக் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் இன்று யாழ். குடாநாட்டில் பரவியுள்ள மலேரியா நோயானது சாதாரண மலேரியா மருந்துகளுக்கு கட்டுப்படுபவையாக இல்லை இதனால் கடுமையான மருந்துப் பிரயோகத்தை மேற் கொள்ளவேண்டியுள்ளதுடன்

பான பூரண ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், மரணத்திற்கு காரணம் ''செப்டிசீமியா'' என கொள்ளப்படுவதினால் மலேரியா நோய் மரணங்கள் எத்தனை என்பதை அறிவது கடினம். இறந்த ஒருவரின் மூளையினை ஆய்வு செய்வதன் மூலமே அவர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு இருந்தாரா என்பதனை அறிய முடியும். எனினும் தற்போது ''மலேரியா'' என்ற சொற்பதத்தை பாவிக்க வைத்தியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை தற்போது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் மலேரியா தடுப்புப் பகுதியினர் பன்முகப்படுத்தலின்கீழ் மலேரியா

காரப்பரவலாக்கம் எனும் போர்வையில் வழங்கல் பகிர்ந்தளிக்கப்பட்டு செயல்படாமல் செய்யப்பட்டமை சுகாதார அதிகாரிகளின் திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது.

எனவேபன்முகமாக்கல்மட்டும் மலேரியாநோயைக் கட்டுப்படுத்தாது என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

எவ்வாறாயினும் மலேரியா நோயின் தாக்கம் யாழ். குடாநாட்டில் அதிகரித்துச் செல்வது வெளிப்படையாகப் புலப்படும் வேளையில் மக்

> யாழ். குடாநாட்டின் மொத்த சனத்தொகையில் 2.5 விதத்தினர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. எனினும் இது 7.5சதவீதமாக இருக்கவேண்டும் என உலக சுகாதார ஆலோசகர் டாக்டர் தேவசகாயம் குறிப்பிடுகிறார்.

பரிசோதனை ஆய்வு கூடத்தினை பல்வேறு பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்டுள்ளமை ஒரு கேலிக்கூத்தான நடவடிக்கையாக அமைந்துவிட்டமையை அவதானிக்கலாம், இந்நடவடிக்கை மூலம் மலேரியா பிரிவில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் ஓரிடத்திலும் பரிசோதனை உபகரணங்கள் இன்னோரிடத்திலுமாக காணப்படுகின்றமை மலேரியா தடுப்பு நடவடிக்கையை ஸ்தம்பிதம் அடையச் செய்யும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இது அதிகாரிகள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் செலுத்தும் கவனத்தை மக்களின் நன்மையில் செலுத்துவதாக இல்லை என்பதனையே காட்டுவதாக உள்ளது.
மலேரியா நோய் குடாநாட்டில் தீவிரமாக பரவி தற்போது 'செப்ரிசீமியா' நோயினால் நாள்தோறும் யாழ் வைத்திய சாலையில் பலர் வயது வேறுபாடின்றி இறந்து

களிடையே மலேரியா நோயைக்கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பிரசார நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டியது சுகாதாரப் பிரிவினரின் அவசர கடமையாகும். மேலும் அரசாங்கத்தினால் போடப்படும் முட்டுக்கட்டைகள் மத்தியிலும் தேவையான மருந்துப் பொருட்களைத் தருவிப்பதற்கு அதிகாரிகள் தமது திறமையினை பயன்படுத்த வேண்டியது மிக அவசியமானதொன்றாகும். அதிகரித்துச் செல்லும் மலேரியா நோயினை ஆரம்பகட்டத்திலேயே கட்டுப்படுத்தத் தவறின் எதிர்காலத்தில் இந்நோய் யாழ். குடாநாட்டில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் பிரச்சினையாக உருவெடுக்கும் என்பதை அனைவரும் உணர்தல் அவசியம்.

# பத்திரிகைத்துறையில் இலத்திரனியல் கருவிகள்

நவீன உலகில் அளவிட முடியாத பெரியதோர் வளமாக தகவல் பரிமாற்றம் உள்ளது. ஆதிகாலத்தில் தகவல் பரிமாற்றம் ஒருவரால் மற்றையவருக்கு நேரடியாக வாய் மூலம் வழங்கப்பட்டது. இன்று நவீன தொழில் நுட்பவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட இலத்திரனியல் கருவிகளின் அறிமுகமும் செய்மதியின் ஆதிக்கமும் மனித சமுதாயத்தில் பாரியதோர் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதை யாருமே நிராகரித்து விட முடியாது. ஒலியாகவோ, ஒளியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இன்றைய உலகு ஒரு தகவல் தொடர்புக்குள் வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வகையில் எழுத்து மூலமான தகவல் பரிமாற்றத்தின் முக்கிய மானதோர் வளமாகப் பத்திரிகைத்துறை காணப்படுகின்றது. இன்று செய்திப் பத்திரிகை உற்பத்தி முறையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுவிட்டன. செய்திப் பத்திரிகை உருவாக்கத்தில் இன்று பெருமளவிலான பங்கினை கம்பியூட்டர்களும் அதனுடன் தொடர்பான இலத்திரனியல் கருவிகளும் ஆற்றுகின்றன. செய்தி வகுத்து தொகுப்பதிலும், (Editing) செய்தி அச்சுப்பதிப்பிலும் கடல் கடந்து செய்திகளைப் பெற்றுக் கொள்வதிலும் இக் கருவிகளின் ஆற்றல் அளவிட முடியாததாகி விட்டது.

இவற்றுடன்இக்கருவிகளின் அறிமுகம் பழைய செலவு கூடிய செய்திப் பத்திரிகை உற்பத்தி முறையிலும் உற்பத்திச் செலவிலும் பெரும் குறைப்பைச் செய்துள்ளமையும் தற்போது ஒப்புக்கொள்ளப்படுகின்றது. செய்திப் பத்திரிகைத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்பவியல் புரட்சி இன்றைய யுகத்தை 'தகவல் யுகம்' என்று அழைக்கக் கூடிய அளவிற்குக் கொண்டு வந்துள்ளது.

தகவல்கள் கம்பியூட்டர்களில் பதியப்படும் முறையின் அறிமுகம் பெருந்தொகையான தகவல்களைச் சேமித்து வைக்கவும் தேவைப்படும் வேளையில் அத்தகவல்களை உடனடியாகவே வழங்கக்கூடிய விதத்திலும் நன்மையளித்துள்ளது. இந்த முறை ஒரு தினசரி செய்திப் பத்திரிகையின் வகுத்துத் தொகுத்தலிலும் வெளியிடுதலிலும் முக்கிய பங்காற்றுகின்றது.

## விரைந்த செயற்பாடு

தினசரி பத்திரிகையை வெளியிடும் நிறுவனம் ஒன்று இத்தகைய நவீன கருவிகளை அறிமுகம் செய்வதனால் செய்திகளைப் பெருமளவில் கையாளும் ஆசிரிய பீடத்திலும், ஆசிரிய பீடத்திலிருந்து அனுமதிக்கப்படும் செய்திகளை அச்சுப்பதிவு செய்யும் அச்சகப் பகுதியிலும், வெளியிடப்படும் செய்திப் பத்திரிகையை விநியோகிக்கும் விநியோகப் பகுதியிலும் ஒரு விரைந்த செயற்பாடு ஏற்படும்.

ஆசிரியபீடத்தைபொறுத்த வரையில் செய்தி சேகரிப்பதிலோ அதைப் பின் எழுத்துருவாககம் செய்வதிலோ எழுதப்பட்ட செய்தியை செய்திப் பத்திரிகைக்கு ஏற்ற வகையில் வகுத்து தொகுப்பதிலோ (Editing) இருந்து வந்த மனித உழைப்பிற்கு மாற்றீடாக புதிய இலத்திரனியல் கருவிகளின் அறிமுகம் அமைந்திருக்கின்றது.

அச்சுப் பதிப்புத்துறையை பார்ப்போமானால் இரண்டாம் உலகப் போரையடுத்து அறிமுகமான 'போட்டோ ரைப் செட்டிங்' முறையிலான அச்சுக் கோப்பும் இதைத் தொடர்ந்து அறிமுகமான உருகும் ஈயம் பயன்படும் 'லினோரைப்' அச்சுக்கோப்பும் நவீன 'போட்டோ கொம்போசர்' முறையுடன் ஒப்பிடடுப் பார்க்கும்போது முன்னைய முறைகளைவிட இத்தகைய போட்டோ கொம்போசர் முறையிலான அச்சுப்பதிவு மும்மடங்கு வேகம் கொண்டதாகக் காணப்படுகின்றது என்பது உண்மையே.

> நவீன உலகில் அளவிட முடியாத ஒரு விடயமாக தகவல் தொடர்புத்துறை விளங்குகின்றது. இதில் தகவல் வழங்கும் சாதனங்களின் சமுதாயத்தின் அனைத்து மட்டங்களையும் சென்றடையும் ஒரு சாதனமாக தினசரிப்பத்திரிகை விளங்குகின்றது. அன்று தகவல் என்பது ஒருவர் மூலமாக ஒருவருக்கு வாய் மூலமாகப் பரிமாறப்பட்டது. இன்று இலத்திரனியல் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி பத்திரிகைத் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ஸ்கானரும், வீ.டி.ரியும்

செய்திப் பத்திரிகையில் வெளியாகும் செய்திகளை தினமும் பெருமளவில் கையாளும் ஆசிரிய பகுதியை பொறுத்தவரையில் கம்பியூட்டர்களினதும் அது சார்ந்த இலத்திரனியல் கருவிகளினதும் உள்வாங்கல் செய்தி ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியர்கள் பணியை வெகுவாகவே குறைத்து விட்டது எனலாம். ஒரு தினசரிப் பத்திரிகைக்கு முக்கிய செய்தி வழங்கும் வளமாக திகழும் செய்தியாளர்களின் கடின உழைப்பையும் இக் கருவிகள் இலகுவானதாக்கி விடுகின்றது. பத்திரிகைத் துறையில் புகுந்துள்ள 'ஒப்டிகல் கரக்டர் ரீடர்' (O.C.R) என்னும் ஸ்கானர் கருவியும் 'வீடியோ டிஸ்பிளே ரேமினல்' (V.D.T) என்னும் கம்பியூட்டரும் வேலைப்பளுவை அதிகளவில் குறைத்துள்ளன.

## செய்தி உருவாக்கலில்...

தனது குறுகிய திரையில் எழுதப்படும் செய்தியை ஸ்கானர் காட்டும் இதை கம்பியூட்டருடன் இணைப்பதன் மூலம் எந்த எந்த செய்திகளை கம்பியூட்டரினுள் சேமித்து வைக்கலாம் என்பதைப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தினர் தீர்மானிப்பதில் இது உதவுகின்றது ஒரு சிறிய ஆளியை விட்டுவிட்டு அழுத்துவதன் மூலம் பல செய்திகளை ஸ்கானரின் திரையில் வரவழைத்து அதைப் பார்வையிட்டு தேவையானவற்றை கம்பியூட்டரில் பதிந்து வைக்கலாம் ஒரு தடவையில் பல செய்திகளைக்கையாளும் இக்கட்டான நிலையில் இக் கருவி பேருதவியாக அமைகின்றது.

வீ.டி.ரி.என்றழைக்கப்படும் கம்பியூட்டர்ஒரு சிறிய திரையையும் தட்டச்சு இயந்திரம் போலமைந்த கீ போட்டையும் கொண்டிருக்கும்.கீபோட்டில் தட்டச்சு செய்வதன் மூலம் அதன் திரையில் சொற்றொடர்களை அமைக்க முடியும். இதன் மூலம் ஒரு செய்தியாளர் தனது செய்தியை இக்கருவியில் தட்டச்சு செய்து பதிந்து விட்டு சென்றுவிடுவார். அதை பின்னர் பத்திரிகையின் செய்தி ஆசிரியரும் உதவி ஆசிரியர்களும் பத்திரிகையில் பிரசுரிக்கக் கூடியதாக செய்தி வடிவாகச் சீர் செய்வர் இவ்வாறு அச்செய்தியாளரின் செய்தி பத்திரிகை ஆசிரிய பகுதியினரால் வகுத்துத் தொகுக்கப்படும்போது நீக்கப்பட வேண்டிய சொற்களை நீக்கவும், சேர்க்கப்பட வேண்டிய சொற்றொடர்களைச் சேர்க்கவும் கீபோட்டை இயக்குவதன் மூலம் செய்ய முடியும். செய்தி இவ்வாறு சீர் செய்யப்படுவது திரையில் வீ.டி.ரி. கருவி காட்டியவாறு இருக்கும். இக்கருவியின் செயற்பாடு பேனாக்களின்றியே ஒரு பத்திரிகையின் ஆசிரிய பீடம் இயங்கும் அளவுக்கு வழிவகுக்கின்றது என்பது வியப்பிற்குரியதே!

## செய்தியாளருக்கு

மறுநாளைய செய்திப் பத்திரிகைக்காக செய்தி ஒன்றுடன் வரும் அப்பத்திரிகையின் செய்தியாளர் இந்த வீ.டி.ரி. கருவியில் தனது தகவலைத் தட்டச்சு செய்யும்போதே அது முன்னே அமைந்துள்ள குறுகிய திரையில் தென்படும். இதைப் பார்வையிட்டு அச்செய்தியாளரே தனது செய்தியில் செய்ய வேண்டிய இறுதிநேர சீர்செய்தலைமேற்கொள்ள முடியும். பந்திகளின் ஒழுங்கமைப்பு தவறான சொற்பிரயோகம் என்பவற்றை அவரே திரையில் பார்வையிட்டுத் திருத்திக்கொள்ள முடியும்.

இதன் பின்னர் அவர் தனது செய்தியை ஸ்கானர் கருவிக்குச் செலுத்தும் வகையில் ஓர் ஆளியை இயக்க வேண்டியது தான். அத்துடன் அவரின் பணி முடிந்து விட்டதாகவே இருக்கும்.

ஸ்கானருக்குச் சென்ற அச்செய்திஅக்கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள தகவல்களை தற்காலிகமாகச் சேமித்து வைத்திருக்கும் கம்பியூட்டரில் சுயமாகவே பதிவாகி விடும். தனது பணியை ஆரம்பிக்கும் செய்தி ஆசிரியரோ உதவி ஆசிரியர்களோ வீ.டி.ரி. கருவியை இயக்குவதன் மூலம் கம்பியூட்டரில் ஏற்கனவே பதிவாகி இருக்கும் செய்திகளை திரையில் அடுத்தடுத்து விழச் செய்ய முடியும். அவரும் தேவையானசெய்திகளை மட்டும் தெரிவு செய்து வீ.டி.ரி. கருவிமூலமே அச்செய்திகளை வகுத்துத் தொகுத்து 'போட்டோ ரைப் செற்றருக்கு' இலத்திரனியல் உதவி மூலம் அனுப்பி விடுவார். அங்கு அச்செய்திமறுநாளைய பத்திரிகையில் வெளிவருவதற்காகஅச் சேறத்தயாராகும்.

ஸ்கானர் மற்றும் வீ.டி.ரி. கருவிகளைச் சில பத்திரிகை நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. சில நிறுவனங்கள் ஸ்கானரை மட்டும் உபயோகிக்கின்றன. வேறு சில வீ.டி.ரியை மட்டும் பயன்படுத்துகின்றன. எனினும் பத்திரிகை வெளியீட்டுத் துறையில் வீ.டி.ரியின் செல்வாக்கே அதிகம் எனக் கூறப்படுகின்றது. பத்திரிகைகளின் ஆசிரிய பகுதியினர் இரு கருவிகளுமே தமது பணிக்கு அவசியமானது எனக் கூறுகின்றனர் ஸ்கானர்கள் மூலம் செய்தியாளர்கள் தகவல்களைச் சேமித்து விட்டுச் செல்ல அவற்றை வீ.டி.ரி மூலம் நாம் சுலபமாக கையாளக் கூடியதாக இருக்கும் என்பது இவர்களின் கருத்து வீ.டி.ரி. மூலம் செய்தியை வகுத்துத் தொகுப்பது சுலபமாக இருக்கும் என இவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

## பக்கவடிவமைப்பில்

வீ.டி.ரி. மூலம் செய்திகளைக் கையாள்வது மட்டுமல்ல ஒரு பத்திரிகையின் ஒவ்வொரு பக்கத்தையும் கூட வடிவமைக்க முடியும். அதாவது வீ டி ரி. கருவி மூலம் ஒவ்வொரு பக்கங்களிலும் உள்ள செய்தித் தலைப்புகள், செய்தியின் வடிவம் மற்றும் கட்டுரைகள், படங்கள், விளம்பரங்கள் என்பவற்றை பத்திரிகையின் ஆசிரியர் அகன்ற ஒரு திரையில் ஒரே சமயத்தில் பார்வையிட முடியும். இவற்றின் ஒழுங்கமைப்புகளை எந்தச் செய்தி எப்பக்கத்தில் எந்த விளம்பரம் எங்கு என்று பலவகையான சீரமைப்புகளை அதைப் பார்வையிட்டே வீ.டி.ரி. கருவி மூலம் ஒழுங்கமைக்கலாம். இதன் பின்னர் ஓர் ஆளியை இயக்குவதன் மூலம் அனைத்துப் பக்கங்களின் வடிவமைப்பையும் அச்சகப் பகுதிக்கு அனுப்ப வேண்டியதே.

இதே வீ.டி.ரி. மூலம் ஒரு பத்திரிகையின் செய்தியாளர் தொலை தூரத்திலிருந்து தனதுசெய்தியை உடனடியாகவே பத்திரிகைக்குஅனுப்பமுடியும். இவர் தமது பத்திரிகை அலுவலகத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்ட தமது சொந்த வீ.டி.ரி மூலமாகவே செய்தியை அனுப்பிவிட முடிகின்றது.

இதைத் தவிர ஒரு பத்திரிகை நிறுவனத்தின் முக்கிய அம்சமானதொலைத் தொடர்பு மற்றும் விளம்பரத்துறை என்பவற்றில் இலத்திரனியல் கருவிகள் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. பத்திரிகை விநியோகம் கம்பியூட்டர் மயமாகின்றது. அச்சிட்டு வெளிவரும் பத்திரிகைகளை விநியோகிக்கும் இடம், அப்பகுதி மக்களுககு அனுப்பவேண்டிய பத்திரிகைகளின் தொகை, அவற்றை கணக்கிட்டு பொதி செய்வது என்ற இதுவரை மனிதனால் மேற்கொள்ளப்பட்டுவந்த தொழில்கள் இன்று படிப்படியாக கம்பியூட்டர்களின் கைகளுக்கு மாறுகின்றது.

## மனித உழைப்பு குறைகிறது

இதேசமயம் இத்தகைய நவீன தொழில் நுட்பங்களின் அறிமுகம் பலரை வேலை இழக்கவும் செய்வதாகவும் உள்ளதை மறுக்க முடியாது ஆனால் அதேவேளை புதிய தொழில் நுட்பம் பாரிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளதும் உண்மை. கடந்த நூற்றாண்டின் இறுதிவரை தினசரிப்பத்திரிகை உருவாக்கம் என்பது ஒரு தனி மனிதனின் உழைப்பிலும் சக்தியிலுமே தங்கியிருந்தது. பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளரே செய்தியாளராகவும் பத்திரிகையின் ஆசிரியராகவும். விளம்பர சேகரிப்பாளராகவும் விற்பனையாளராகவும், அச்சுக் கோப்பாளராகவும், அச்சுப் பதிப்பாளராகவும் தொழிற்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது. இத்தனைக்கும் அப்பால் பத்திரிகை விநியோக தொகையும் குறுகியதாக மூன்று இலக்கங்களுக்கு மேற்பட்டதாகவே இருந்தது தொழிற்துறையில் ஏற்பட்ட புரட்சி இந்த சகாப்தத்தை முடித்துவைத்து விட்டது என்றே கூறலாம்.

## புதிய தொழில்நுட்பத்தின் அவசியம்

அண்மைய வருடங்களில் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஊதியம் மற்றும் அச்சுத்தாளுக்கான விலை உயர்வு என்பன பத்திரிகைத்துறையில் பாதிப்பு ஏற்படுத்தியது உணரப்பட்டது. இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பி பிழைப்பதற்கு நவீன இலத்திரனியல் கருவிகளின் அறிமுகம் அவசியம் என்று பத்திரிகைத் துறையினர் உணர்ந்தனர் நவீனதொழில் நுட்பத்தின் அறிமுகம் அப்போது சினிமாத்துறையை எவ்வாறு நஷ்டத்திலிருந்து காத்ததோ அதே போன்று பத்திரிகைத் துறையையும் காத்துக் கொண்டது.

நவீன தொழில் நுட்பத்தின் அறிமுகம் தினசரி பத்திரிகையின் உற்பத்தி வேகத்தை கூட்டிய அதே சமயம் ஒரு பத்திரிகை பல்வேறு இடங்களில் ஒரே சமயத்தில் வெளியாவதற்கும் வழிவகுத்துள்ளது.

இலத்திரனியல் சமிக்ஞைகள் மூலமாக அச்சகங்கள் அதுவும் பல மைல்களுக்கு அப்பாலுள்ள அந்நிறுவனங்களின் அச்சகங்கள் ஒரே நேரத்தில் இயங்கி மறுநாள் ஒரே பத்திரிகை வேறு பகுதிகளில் வெளிவரச் செய்கின்றது. இது ஒரு பத்திரிகை நிறுவனத்தின் விநியோகப் பிரச்சினைகளையும் சுலபமாக்கியதெனலாம்.

## செய்மதியின் பங்கு

இதைவிட தகவல் தொடர்புத் துறையில் செய்மதிகளின் அறிமுகம் இன்று பாரிய அளவில் துணை புரிகின்றது. உலகின் ஒரு மூலையில் நடைபெறும் தகவல் முழு உலகிற்கும் பரவுவதற்கு இந்த செய்மதிகளே முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்று உலக செய்தி நிறுவனங்களில் முக்கியமானதோர் இடத்தைப் பிடித்துள்ள அமெரிக்கத் தொலைக் காட்சி செய்தி நிறுவனமான சீ.என்.என். (Cable News Network) செய்மதி மூலமாகவே தனது முழு செயற்பாட்டையும் நடத்துகின்றது என்பதை இங்கு சுட்டிக் காட்டலாம். செய்மதிகளின் செய்தித் துறையிலான தாக்கம் உலகை ஒரு சிறு கிராமமாக்கி விட்டது (Globel Village) என உலகின் பிரபல செய்மதித் துறை நிபுணரும் மொரட்டுவ பல்கலைக்கழக துணைவேந்தருமான ஆர்தர் சி. கிளார்க் கூறுகின்றார்.

இன்று உலகில் செய்தித் துறையில் குறிப்பாக பத்திரிகைத் துறையில் இவ்வளவு நவீன வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் எமது பிரதேசத்தில் பத்திரிகைகள் தற்போது இத்தகைய வசதிகள் ஏதுமின்றியே செய்திகளை தாங்கி வந்து கொண்டிருக்கின்றன.

**துஷ்யந்தன்**

# ஜேர்மனியில் வெளிநாட்டவருக்கு பாதுகாப்பு கிட்டுமா?

## தமிழ்ச் சிறுமியின் கொலை எழுப்பியுள்ள கேள்வி

ஜேர்மனியில் வாழ்ந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு பாதுகாப்பு உள்ளதா? அவர்களது வாழ்க்கை நிரந்தரமானதா? எதிர்காலம் எப்படி அமையும்? என்ற கேள்விகள் அவர்களது மனங்களில் எழுந்தவண்ணமே உள்ளன.

காரணம், ஜேர்மனியில் நடைபெற்றுவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள், கொலைகள், தாக்குதல்கள், உடைமைகள் அழிப்புக்கள்தான்.

ஜேர்மன் அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கு எதிரான வன்செயல்கள் அதிகரித்துக்கொண்டு வருவதனால் வெளிநாடுகளில் ஜேர்மனியின் மதிப்புக்குறைந்து வருவதை அவதானித்தது. இதனால் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கையுடைய தீவிரவலதுசாரிக் கட்சிகள், இயக்கங்களைத் தடை செய்து வருகின்றது. இதன்காரணமாகஇவைகள் இரகசியமான முறைகளில் செயற்பட்டு வரமுற்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளில் ஒன்றாக வெளிநாட்டு சிறுமிகள் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதும் இருக்கலாம் என்று சந்தேகிக்கஇடமுண்டு.

ஆரம்பத்தில் ஜேர்மன் பணக்காரர்கள் தொழிலதிபர்களின் பிள்ளைகளைக் கடத்தி பணக்கோரிக்கை விட்டுபணம் பறிக்கும் கும்பலொன்று இருந்தது. அப்படியானவர்கள்தான் சிறுமியர்களைக் கொலை செய்பவர்களாகவும் இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகப்பட்டார்கள்.

ஆனால் 1993 ஆம் ஆண்டு கோடை காலத்தில் தமிழீழச் சிறுமி செல்வி சுஜிதாவுடன் சேர்த்து 19 சிறுமியர்களின் கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதில் 7 வெளிநாட்டுச் சிறுமியர் அடங்குகின்றனர். இது பற்றி ஒரு பொலிஸ் பேச்சாளர் இப்படிக் கூறுகிறார்: கிட்டத்தட்ட ஒரே வயதை அண்டிய நல்ல அழகான தோற்றம் கொண்ட வெளிநாட்டுச் சிறுமிகளைத்தான் இந்தக் கடத்தல், கற்பழிப்புக் கொலைகளுக்கு தேர்ந்தெடுக்கிறார்கள் என்று இதுவும் ஒரு புதிய சந்தேகத்தைத் தூண்டிவிடுகிறது.

லின்னிச் நகரில் வசித்த செல்வி சுஜிதா புவனேஸ்வரன் 26 08 93 காலை 7.30 மணிக்கு பாடசாலைக்குச் சென்றவள் மாலை வீடு திரும்பவில்லை. பெற்றோர் தேடினார்கள். பொலிசில் புகார் செய்தார்கள். பொலிசார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதாகச் சந்தேகித்த பெற்றோர் சட்டத்தரணியை அணுகினார்கள். இதனையடுத்து பொலிசார் தீவிரமாகத் தேடத் தொடங்கினர். ஆனால் 7 9.93 அன்று கங்கெல்ற் (GANGELT) என்ற காட்டுப் பகுதியில் எரியுண்ட நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இந்த வேதனைமிக்க துயரம் தாங்காத சம்பவம் வெளிநாடுகளில் வாழும் அத்தனை தமிழீழ மக்களின் இதயங்களிலும்பதிந்துஒரு முக்கிய உண்மையைப்புலப்படுத்திச்சென்றுள்ளது. அது தமிழீழத்தை விட்டு உயிர்ப்பாதுகாப்புக்காக வெளிநாடுகளுக்கு ஓடிவந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுக்கு இங்கும் பாதுகாப்பில்லை. இதனை நன்கு உணர்ந்து சிந்திப்பீர்களானால் உங்களுக்குப் பாதுகாப்பு இறைமை மிக்க தமிழீழம்தான் என்பது புலப்படும் என்பதே;

வெளிநாடுகளில் தமிழீழ மக்கள் வாழ்ந்துகொண்டிருப்பது ஒரு தற்காலிகத்தங்குமிட வாழ்க்கை தான் நிரந்தர அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை இங்கு இல்லை. நாங்கள் எப்படித்தான் ஆடம்பர உல்லாச வாழ்க்கையை வாழ்ந்தாலும் அது போலியான நிம்மதியற்ற வாழ்க்கைதான்வேற்றுமொழிகலை, பண்பாட்டில் நாங்கள் மூழ்கி அந்த வாழ்க்கையை வாழ முற்பட்டாலும் அந்நிய மண்ணில் நாங்கள் அந்நியர்கள்தான் என்பதற்கு இந்நச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகின்றது

ஒரு தந்தை கொடுத்த முறைப்பாட்டை பொலிசார் பொருட்படுத்தாமல் அசட்டுத்தனமாக இருந்தார்களென்றால், அது எதனைக் குறிக்கின்றது? இவர்கள் வெளிநாட்டவர்கள்தானே என்ன நடந்தாலும்எங்களுக்குஎன்ன என்ற எண்ணமா? அல்லது இப்படி எத்தனையோ நடக்கின்றது இதில் இதுவும் ஒன்றுதானே என்ற அசட்டையா? எது எப்படித்தான் இருந்தாலும் ஜேர்மனி போன்ற நாடுகளில் வெளிநாட்டவர்களாகிய எங்களுக்குப் பாதுகாப்புக் குறைந்துகொண்டு போவது புலப்படத்தொடங்கியுள்ளது.

இக்கொலையைக் கண்டித்து கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஜேர்மன் நாட்டின் லீனிச்நகரில் பெரும் மௌன ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது.

தமிழ் மாணவர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த மௌன ஊர்வலத்தில் கொலை செய்யப்பட்ட செல்வி சுஜிதாவின் பெரியளவிலான உருவப்படத்தை தாங்கியவாறும் சுலோகங்களைஏந்தியவாறும் பெருமளவு இலங்கையர்கள் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் லீனிச் நகரத்தில் உள்ள செல்வி சுஜிதாவின் வீட்டில் ஆரம்பமான அந்த ஊர்வலம் தேவாலயம் வரை சென்று அங்கிருந்து சேமக்காலையை சென்றடைந்தது. கோஷங்கள் எதுவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாதங்களோ ஓராறு எம் மனதுகளோ ஆறாது



அன்னை மடியில்
இம் மங்கை

03-05-1970

ஆழ்கடலில்
இக் கங்கை

10-08-1993

### செல்வி இளவேணி அதிருபசிங்கம்

வல்வை

மாறாதம்மா மாறாது மனத்துயரோ மாறாது
மாதங்களோ ஓராறு மனதுகளோ ஆறாது
தீராதம்மா தீராது துயரங்களோ தீராது
காலங்களோ பலபோகும் கவலைகளோ தீராது
எண்ணங்களில் உன்னையேற்றி இனியபல எண்ணி நின்றோம்
கண்களிலே உன்னைவைத்துக் கனவுபல கண்டு வந்தோம்
மண்ணதிலே நன்மலராய் மலரவைக்கக் காத்து நின்றோம்
விண்ணதிலே உன்னைச்சேர்க்க விரைந்து நீ போனதுமேன்
சிந்தைகளில் நின்றுதினம் செயல்களினால் வாட்டுகின்றாய்
சிந்திவரும் உன்சிரிப்பால் செந்தழலில் வீழ்த்துகின்றாய்
வந்துநின்றே உன்வடிவை வகைபலவாய்க் காட்டுகின்றாய்
தந்துநின்றே உன்குரலால் துயரமதில் ஆழ்த்துகின்றாய்
தந்தைவழி பாட்டனென்றோ தந்தவழி நீயறிந்து
உந்தனடி அந்தவழி உவந்துமா நீபதித்தாய்
சிந்தையெலாம் வெந்துதினம் செந்தழலில் வெதும்புகின்றோம்
உந்தியெலாம் உன்பிரிவால் உலைத்தீயாய் எரியுதம்மா
தாங்காதம்மா தாங்காது நெஞ்சங்களோ தாங்காது
நீங்காமலே நின்றிடுவாய் நெஞ்சங்களில் நிழலாக
பாங்கான உன்வடிவைப் பார்த்துநின்ற காலமம்மா
மாதங்களோ ஓராறு எம்மனதுகளோ ஆறாது.
எம் கண்கள் சுரந்திடும் துளிகள்
உன் தாள்கள் சுமந்திடும் மலர்கள்.

நெடியகாடு, ஐயா, அம்மா, அக்கா,
வல்வெட்டித்துறை. தம்பியர்: ஆதவன், ஆகுகன்.

(7443)

## இன்னொரு ஷெல் வரக்கூடும்

வாழைத் தோட்டக் கரையினிலே
வந்து வீழ்ந்த ஷெல்லினாலே
வீதியிலே சென்ற நான்
வீழ்ந்தேன் தரையினிலே.
பரவியது வெளிச்சம்
கிழிந்தது செவிப்பறை
தரையிலே வீழ்ந்த நான்
தலை நிமிர்த்த விரும்பவில்லை
துண்டு பறந்ததாலே - எனது உடல்
துண்டு ஆனதோ அறியேன்
இரத்தம் உறைந்தது பயத்தாலே
மூச்சும் இரைத்தது. வெளியாலே
நெஞ்சடிக்கும் சத்தம் - என்
காதோரம் கேட்க
வீசும் காற்றும் கூட
எனக்குக் கூவும் ஷெல்லானது
பத்துயார் தூரத்தில்
பற்றி எரியுது மரஞ்செடிகள்
அள்ளி இறைத்த மண்ணாலே
சரளமாய்க் குளித்து நின்றேன்
இந்த மண் எங்களின்
சொந்த மண் என்று
பாட்டுப் பாட நினைத்தாலும்
வாயேனோ திறக்கவில்லை...
ஆடிவரும் ஷெல்லது
தனித்து வர மாட்டாது
தேடி வரும் துணையை
அப்போது ஆ...
நிச்சயமாய் இன்னோர் ஷெல்
வரக் கூடும்
நினைவு வந்து உச்சியிலே
சுள்ளென்று ஏற...
இன்னும் நெருக்கமாய்
என் இதய ஒலி கேட்க...
பத்து யார் கூட்டிப்
பத்திரமாய் அடித்தால்...
சுத்தமாய் எந்தன் நிலை
எண்ணிப் பார்க்க முடியவில்லை
செக்கன்கள் நிமிடங்களாகி
நேரம் கரைந்தோட
தரையொடு தரையாய்
ஒட்டியபடி நானும்...
நிச்சயமாய் இன்னுமொரு
ஷெல் வரக் கூடும்...
என்ற நினைவில்...
எழும்ப முடியவில்லை...

- கோமகள்


உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீ முக ஹு தைமாதம் 30-நாள் (12-02-1994) சனிக்கிழமை காலை 11-00 மணிமுதல் 12-15 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**சிறீதரன் B. Sc.**
(சமூக சேவை உத்தியோகத்தர் கச்சேரி, வவுனியா) அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
**ரஜிதா**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு வவுனியா ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
**பொ. தியாகராசா**
90, சட்டநாதர் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.
இராசையா அன் சன்ஸ் - மருந்துக்கடை
யாழ்ப்பாணம் - திருநெல்வேலி,

திரு: திருமதி
**இ. இராசரத்தினம்**
223, பருத்தித்துறை வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்.
தங்கம்ஸ் களஞ்சியம்
முத்திரைச் சந்தை, நல்லூர் யாழ்ப்பாணம்.

வரவேற்பு இல்லம்: 12/1, இராஜதுரை வீதி, வைரவ புளியங்குளம். வவுனியா.
(இரு வீட்டார் அழைப்பு) (7392)

# சிறுகதை

# புறாக்கள்

## டானியல் அன்ரனி

இருள் இன்னும் பிரியாத அதிகாலை. அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்த புறாக்கள் ஒவ்வொன்றாகப் பறந்து வந்து கோயில்கோபுர உச்சியில் குந்திக் கொண்டன.

வெள்ளை, சாம்பல், கறுப்பு, பழுப்பும் மஞ்சளும் எனாமல் இன்னும் பல வர்ணங்களில்...

மெல்லிய அனுக்கம்... உறுமல்போல் அந்தப் புறாக்களின் சத்தமும் கேட்க விசித்திரமாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் அவன் காணுவது தான். நாள் முழுவதும் வாழ்க்கை நெருக்குதலுக்குள்ளும் எங்கேயோ மெதுவாக மனதுக்கு ஒத்தடம் கொடுப்பது போல் அவனைத் தொடர்ந்தது.

பதினைந்து பேருக்கு மேல் இருக்கலாம். கோபுரத்தைச் சுற்றி கீழே சிறுவர்கள். கோபுர உச்சியை அண்ணாந்து பார்த்தபடி.

சீக்கை ஒலி, கைதட்டல், உஸ் உஸ்... என்னும் சத்தம் கோவில் வளவை அதிரவைத்தது. நெட்டையான ஒருவன் வெள்ளை நிறத்தில் புறா ஒன்றை கையில் உயரத் தூக்கிப் பிடித்தபடி 'உஸ்... உஸ்...' என இரைந்து கொண்டு ஆகாயத்தை நோக்கி உச்சியில் இருந்த புறாக்களைத் தேடிப் பறக்க விட்டான்.

அந்தப் புறாவும் பறந்து சென்று அவற்றோடு சேர்ந்து அனுங்கி உறுமியது. விடுவிக்கப்பட்ட புறா மற்றப் புறாக்களையும் அழைத்துக் கொண்டு வளர்த்தவன் வீடு தேடி கூட்டுக்கு வருமாம்...

''அங்க பாற்றா... அது எகிப்சன்... அல்ல'' ஒருவன் சத்தம் போட்டான்.

''போடாமொக்கு நல்லாப் பாரடா... அது 'கோமர்'' புறாப் பறக்க விட்ட நெட்டையன் இது.

''அங்கேரடா... 'கரணம்' கடைசியில் குந்திக் கொண்டிருக்கு... எல்லாப் புறாக்களும் இருக்கடா எங்கட வீட்ட... 'கரணம்' மட்டும்தான் இல்ல'' குட்டையான தொப்பையன் ஒருவனின் அங்கலாய்ப்பு...

''நண்ஸ்', 'சைனா', (F) 'பாண்டில்...' இன்னொருவன், குந்தியிருந்தபுறாக்களின் இனங்களை வரிசைப்படுத்தினான்.

அவனுடைய மகனும் கோபுர உச்சியை அண்ணாந்து பார்த்தபடி கல்லொன்றில்குந்திக் கொண்டிருந்தான். கைகள் இரண்டும் கன்னத்திற்கு முட்டுக் கொடுத்தபடி.

முத்தர் மாமாவைப் பார்த்தான். அவர் சாய்வு நாற்காலியில் சரிந்து கிடந்தார். அவர் கையில் விரித்தபடி சுவிசேஷப் புத்தகம், மூக்குக் கண்ணாடியை அடிக்கடி சரிசெய்து கொண்டே இராகத்துடன் வாசித்துக் கொண்டிருந்தார்.

செல்வி குசினிக்குள் இருந்து ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள்.

''எங்கயப்பா உன்ர மகனைக் காணயில்ல ...'' அவன் சிரித்தபடி விறாந்தையிலிருந்து குரல் கொடுத்தான். முத்தர் மாமாவும் திரும்பிப்பார்த்தார்.

''காலையில படிக்கச் சொல்லி நித்திரையால எழுப்பிவிட்டன்... எங்கபோய்த் தொலைஞ்சுதோ தெரியாது' அவள் குசினிக்குள்இருந்தபடி இரைந்து பேசினாள். முத்தர் மாமாவுக்கும்சிரிப்புவந்தது ..

''தூர . ஒருடமும் போகயில்ல புள்ள உன்ரமகன்... புறாப்பொடியளோட கோயில் வளவுக்குள்ளதான் நிற்கிறான்'' முத்தர் பேசிவிட்டு மீண்டும் புத்தகத்தை விரித்தார்.

இப்போது சிறுவர்களின் இரைச்சல் பெரிதாகக் கேட்டது. விசில் அடி.., கைதட்டல்...ஒரே ஆரவாரம். கற்கள் சரமாரியாக பறந்தன. கூரை ஓடுகளில் சடசட வென விழுந்தன. அடுத்த கணம் திமு திமு [வென நாலுபக்கமும் சிதறி ஓடினர்.

நீண்ட பூவரசம் தடியுடன் கோயில் சபை முதல்வர் அருளர் இராட்சதன் போல் விஸ்வரூபம் எடுத்து அவர்கள் முன் நின்றார்.

'டேய்... ஓடக்கூடாது ஒருத்தனும்... ஓடக்கூடாது நில்லுங்கடா...'' அகப்பட்ட ஒருவனுக்கு செம்மையான சாத்தல். பூவரசம் தடி நாராகக் கிழிந்தது.

அவர் சத்தம் போட்டுத் திட்டிய படியே முறிந்த தடியை கோபத்துடன் வீசி எறிந்தார். ஏதோ தனக்குள் பேசியபடி தலையாட்டிக் கொண்டு இவன் வீட்டை நோக்கி வந்தார்.

முத்தர் மாமா கண்ணாடியை சரிசெய்து கொண்டே எதிரே வந்து கொண்டிருந்த அருளரை நிமிர்ந்து பார்த்தார். வாசிப்புஇடையில்நிறுத்தப்பட்டது. சுவிசேஷத்தை மூடினார். கண்ணாடியைக்கழற்றி அதன் மேல் வைத்தார்.

'என்ன... முத்தர் பக்கத்தில் இருந்து கொண்டு பறயாமல் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிற.. பொடியளட வம்புச்சேட்டையை பார்த்தியா... சங்கிடுத்தாமெண்டு உனக்குத் தாற சம்பளம் பணியப்போட்டகாசு'' அருளர் பேசிக் கொண்டிருந்தார், முத்தர் எதுவும் பேசாமல் இருந்தார். 'கோயில் ஓடுகளெல்லாம் நாசம்... போன கிழமதான் இருபத்திஞ்சு ஓடுகள் மாத்தியிருக்கு... சுவாமி சொல்லிப்போட்டேர் இதுக்கு ஒரு முடிவுகட்டாட்டியா பூசையும் வைக்கமாட்டன் என்று''-

முத்தர் வாய் திறந்தார்: 'சுவாமியும் எத்தின தடவை பிரசங்கத்தில சொல்லியிருப்பார். நானும் வீடு வீடாச் செண்டுஅவங்கடஅப்பன்மாரஉறைக்கப் பேசிப்போட்டுத் தான் வந்தனான். இதுக்கு மேலேநான் என்ன செய்ய ..'

அருளர் கிளம்பினார்- முத்தருக்கு வேகம் வந்துவிட்டது தொடர்ந்து இரைந்தார்: ,'தாறது மாதம்...முன்னூறு ரூபா...அதுக்குள்ள இவ்வளவு கதையும். இந்த மாதத்தோட பேசாமல் வீட்டோடு நின்றிட்டா கரைச்சலில்லை...''

செல்விவெளியே வந்தாள் அவள் பின்னால்ஒளித்துக்கொண்டுகவுணை பிடித்தபடிமகன் வந்தான். இவன்எப்படி வந்து குசினிக்குள்ள புகுந்தான்'? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் பள்ளிக்குப் போக ஆயத்தமாக நின்றான். 'அப்பு கோயில் வேலைக்கு. போகாட்டியா சுருட்டுக்கு வெத்திலைக்கு என்னசெய்யப் போற' அவள்சிரித்தபடிதேநீர் கோப்பையை தந்தையிடம் நீட்டினாள்.

'உனக்கும் ஒருமாதிரி கேப்பேறு வச்சிற்றுப்போல... உன்னட்ட வருவன் எண்டு பாக்கிறியா'...

இவன் சைக்கிளை தள்ளிக் கொண்டே அலுவலகத்திற்கு புறப்பட்டுச் சென்றான்.

❁ ❁ ❁

மாலையில் அலுவலகம் முடிந்து வந்து ஆசுவாசத்துடன் கதிரையில் 'தொப்'பென்று விழுந்தான். அதில் இருந்தபடியே உடுப்புகளைக் களைந்தான். கிணற்றடிப் பக்கம் சென்று கைகால்முகம் கழுவினான். துவாய்த் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தபோது தான் கோயில் முன் வளவில் ஸ்பீக்கரும் பாட்டுமாக இரைச்சல் கேட்டது.

'என்ன விசேசம் கோயில் வளவில, ஆரவாரமாக இருக்கு...'

'இண்டைக்கு ஏதோ கூட்டமாம் பெரிய ஆக்கள் எல்லாம் வந்து பேசப்போறாங்களாம்' இது செல்வி. 'சரி இண்டைக்கு கூட்டத்துக்குப் போவம்...' முத்தர் தேங்காய் சிரட்டைய சுரண்டி அகப்பை சரிக்கட்டிக் கொண்டிருந்தார்.

அந்த இடம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடையைச் சுற்றி இருவர்ணத்துணிகளால்திரை கட்டப்பட்டிருந்தது. காற்றில் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகள் வேகமாக படபடத்தது. மாலைகள், சரங்கள் வளவுமுழுவதும் நிறைந்தன.

மேடையில் பலர் இருந்தனர். சீருடையில் சிலர், சாதாரணஉடையில்சிலர். அவர்களில் தெரிந்த முகங்களைத் தேடினான். தலைமை வகித்துக் கொண்டிருந்தவர் ஊருக்குள் அடிக்கடி வந்து போகின்றவர்.

அந்த நாளைய தேர்தல் கூட்டங்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. மேடையில், பல பிரமுகர்கள் பட்டுவேட்டி சட்டையுடன் சோடா குடித்துக் கொண்டிருப்பார்கள். வேட்பாளர், கழுத்து நிறைய மாலையுடன் களற்ற மனம் இல்லாமல் சுமந்து கொண்டு இருப்பார். அடிக்கடி ஆங்கில வார்த்தைகளுக்கு பக்கத்திலிருப்பவரிடம் தமிழில் அர்த்தம் கேட்பார். சில வேளை ஆங்கிலத்திலேயே பேசுவார். சிறு கும்பல் ஒன்று நின்று கைதட்டி ஆரவாரம் செய்யும். பெரும்பாலானமக்கள் தூங்கி வழிந்து கொண்டிருப்பர்.

கூட்டத்தை ஒரு தடவை நோட்டமிட்டான். ஊரில் உள்ள பலரும் வந்திருந்தனர். பூவரசமரத்திற்கு கீழ் முத்தர் சுருட்டை புகைத்தபடி பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். நாளை சங்கக்கடைக்கு முன் விறாந்தையில் நடக்கும் 'சபா மண்டபத்தில்' விளக்கவேண்டும்.

'ரியூப் லைற்' கட்டியிருந்த மூன்றாவது 'போஸ்ட்' அருகே அந்தப் 'புறாக்கூட்டம்' நின்று கொண்டிருந்தது. ஒருவனுடன் இன்னொருவன் மோதி, தள்ளி விழுத்தி, துரத்திப் பிடித்து ..

பக்கத்தில இருந்த 'பெரியவர்' ஒருவர் அவர்களை ஏசியது காதிலும் விழுந்தது. அதன் பின் மௌனமாக புல் தரையில் குந்திக் கொண்டார்கள். கவனமாகப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்

இறுதியாக ஒருவர் பேசினார். ஒடுங்கிய முகம். உதடு முழுவதும் கறுத்த மீசை. சிவந்த நிறம். சரளமான மொழிநடை. அழகானபேச்சு உலகில் நடந்த, நடந்து கொண்டிருக்கின்றவிடுதலைப் போராட்டங்களையும், அவற்றின் வரலாறுகளையும் விளக்கினார். எமக்கு என்று ஒருதேசம் ஏன் அவசியம் என்பதற்கு தர்க்க ரீதியாக உதாரணங்களுடன் தெளிவுபடுத்தினார்...

இறுதியில் 'எதிரிகள் எமது எல்லையில் நிற்கின்றார்கள். இன்றே எம்முடன் நீங்கள் இணைந்தால் இன்றே துரத்தி அடித்து விடலாம். நாளை வருவீர்களானால் நாளை தான் துரத்த முடியும். இன்னும் நாள் சென்றால் எதிரிகள் தாமதித்தே போவார்கள். உங்கள் விருப்பம் என்ன மாதிரி... இன்றே வருவீர்கள் என்று சொல்கிறீர்களா?''

கூட்டத்தில் இருந்த சனங்களுக்கிடையே பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். பார்வையில் பலவித அர்த்தங்கள் வழக்கம் போல் புறாக்களின் அனுங்கல் உறுமல் சத்தத்துடன் இவன் விழித்துக் கொண்டான். கோயில் வளவுக்குள் வழக்கமாக தென்படும் சிறுவர்களைக் காணவில்லை. ஆச்சரியமாக இருந்தது. வயதில் குறைந்த இரண்டு அல்லது மூன்று பேர் மாத்திரம் 'வாயப்பிளந்தபடி' அண்ணாந்து கோபுர உச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

'நேற்றைய அருளரின் அடியுடன் பொடியங்கள் எல்லாம் பயந்து போயிற்றாங்க போல இருக்கு' அப்பொழுது தான் செல்வி பக்கத்து வீட்டு வேலியில் நின்று யாருடனோ பேசிவிட்டு உள்ளே வந்தாள்.

'உங்களுக்கு விசயம் தெரியுமா... நேற்று இரவிலிருந்து பத்து பொடியளக் காணயில்லையாம்...ஒருக்காலும் இப்படிதொகையாக போகயில்ல ...ஊரே... ஒரே...கதையா இருக்கு... எல்லாம் இங்க புறாப் புடிக்க வாற பொடியங்கள்...'' அவன் எதுவும் பேசவில்லை. கோபுர உச்சியைப் பார்த்தான் இன்னும் சில புறாக்கள் பறந்து வந்து கோபுரத்தில் குந்தின. அந்த வளவு முழுவதும் அசாதாரண அமைதியும் வெறுமையும் நிலவியது போல் இருந்தது.

செல்வி உன்ர மகன் நிற்கிறானா... பார்த்தியா ..

ஒரு நமட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

''சும்மா போங்க அவன் குழந்தைப் பொடியன்''

அவன் கதிரையை விட்டு எழுந்து பக்கத்திலிருந்த சிகரட் ஒன்றை எடுத்து தீக்குச்சியை உரசி பற்ற வைத்தான் ஒரு இழுப்பு இழுத்தான்.

'செல்வி அது அல்ல பிரச்சினை சுட்டித்தனமும் சுறுசுறுப்பும் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உள்ளவங்கள் தான் இந்த வேலைக்குப் போவாங்க 'வாயப்பிளந்து' கொண்டு யாரும் செய்வதை வேடிக்கை பார்க்கிறவங்களுக்கு இந்த சிந்தனை வராது' வெளியில் புறாக்களின் முனகலும் உறுமல்களும் மரத்திரம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



இறப்பு:
12.01.1994

### திரு. விசுவநாதன் சீவரட்ணம்

(முன்னாள் P.W.D. ஓவசியர்)

எங்கள் குடும்ப வானில் உதயமான அணையாத தீபமாய் எரிந்த ஆருயிர் தெய்வமே, பாசம் மிகுந்த தந்தையே, ஐயா உங்கள் நினைவு என்றென்றும் எங்களை விட்டுப் போகாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இன்று 11.2.94 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவான் வீதி,
வழக்கம்பரை,
தொல்புரம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7476)

## வண்ணை - சாந்தையர் மடம்
## ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்
## சைவ சமய அபிவிருத்திக் கழகம்
## சைவ சமய அறிவுப் பரீட்சை-1994

ஃ பரீட்சை மண்டபங்கள் ஃ

ஃ M-என்ற சுட்டெண் உடன் ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம்
— யாழ். இணுவில் மத்திய கல்லூரி

ஃ N-என்ற சுட்டெண் உடன் ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம்
— யாழ்.வண்.நாவலர் மகாவித்தியாலயம்

ஃ H-என்ற சுட்டெண் உடன் ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம்
— யாழ். இந்துக்கல்லூரி

ஃ V-என்ற சுட்டெண் உடன் ஆரம்பிக்கும் மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம்
— யாழ்; வைத்தீஸ்வராக் கல்லூரி

**பரீட்சை நாள் 13.02.1994**

**ஞாயிறு காலை 9.30 மணி**

ஃ இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- சைவ சமய அபிவிருத்திக்கழகம்

(சி-8578)



## இளங்கலைஞர் மன்ற
## 14-வது ஆண்டு இசைவிழா

**இடம்:** மன்ற கலாமண்டபம்
**காலம்:** 12.02.94 — 26 02.94
தினமும் பி. ப. 4-00 — இரவு 10-00 மணி.

மேற்படி விழாவில் நாதஸ்வர, தவில், வாய்ப்பாட்டு, வயலின், வீணை, வேணுகானம், மிருதங்க இசை, வில்லிசை, கதாப் பிரசங்கம், பரதநாட்டியம் போன்ற பல தரப்பட்ட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இளங்கலைஞர்களும் முன்னணிக் கலைஞர்களுமாக 500க்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்வர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,

மேற்படி மன்றத்தினர்

(சி-8560)


## உலக தலைவிதி

கிறார்கள். யுனெஸ்கோ அறிக்கை இது. மிக கடைசியாக வெளிவந்த UNDP யின் 1992ஆம் (Human Development Report) ஆண்டு அறிக்கையில் மேலைத்தேய - கீழைத்தேய வருவாய் இடைவெளி விகிதம் 150:1 ஆக இருக்கிறது என்கிறது. அதாவது தெற்கு உலகை விட 150 தடவை கூடுதல் வருவாய் மேற்கில் பெறப்படுவது என்பதே இதன் பொருள்.

எனவே கொடுத்தவனே எடுத்துக் கொண்டான் என்கிற நிலையில் - புதிய உலக ஒழுங்கு என்கிற பெயரில் சமமற்றபோட்டி முறைமையொன்று மூர்க்கத்தனமாக மேற்குலகால் ஐ. நாவிற்கு ஊடாகத் திணிக்கப்படும் நிலையில்- உலகவங்கி சருவதேசநாணய நிதியம் போன்றவை இனக் கொலைக்கு ஒப்பிடத்தக்கதான ஏற்பாடுகளைப் புகுத்தும் நிலையில் மூன்றாம் உலகம் இருப்பதையும் தாம் இழக்கமுன் விழிப்படைய வேண்டியதாகிறது.

தற்சார்புத் தந்திரோபாய பொருண்மிய உத்திகளைப் பின்பற்றுவதே இப்போதைக்கான வழியாகக் கூடும்.


**1994 English Teachers Exam.**

Class for the competitive examination for recruitment of English teachers for 1994 will be conductor at The College of Higher studies, Annaipanthy, from 16th of February 1994, by veteran English teacher contact College Office for particulars.

**The College of Higher Studies, Annaipanthy.**

(7484)


## ஜேர்மனி

எழுதப்படாது மிகவும்மௌனமாக நடைபெற்ற இவ்ஊர்வலத்தினை சீருடை அணிந்த தமிழ் மாணவர் அமைப்பின் தலைவர் ஆரம்பித்து வைத்தார். செல்வி சுஜிதாவின் பெரியளவிலான உருவப்படத்திற்கு அவரது தாய், தந்தையர் மாலையிட அவ் உருவப் படத்தினை மாணவர்அமைப்பின் உறுப்பினர்கள் முன்னே தாங்கிச் செல்ல தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளை, டென்மார்க்கிளை, கலை பண்பாட்டுக்கழகம், உலகத் தமிழர் இயக்கம்தமிழ் மாணவர் அமைப்பு ஆகியன உட்பட 50ற்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தபெருமளவு உறுப்பினர்கள் பின் தொடர்ந்து அணிவகுத்துச் சென்றனர், இவர்கள் மலர் வளையங்களை தாங்கிச்சென்றதுடன் ''மனித நேயம்வளர்க்கப்பட வேண்டும்'' பொலிசாரின் அலட்சிய மனப்பான்மைநீக்கப்பட வேண்டும்'' என்பன போன்ற சுலோகங்களையும் ஏந்திச் சென்றனர்.

ஊர்வலம் சேமக்காலையை அடைந்ததும் அங்கு மாணவியின் பூதவுடலுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சர்வமதப் பிரார்த்தனையும் இடம் பெற்றதுடன் அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரச்சாவு:
13.11.1993

**2-ம் லெப். ஆதிரையன்/இல்மன்**
(கந்தையா ரகுபிரபாச்சந்திரன்)

எழில் கொஞ்சும் குறிஞ்சியிலே தவழ்ந்து.
பொன்கொழிக்கும் பூமியாம் சரம்பொன்னில்
நாளொரு வண்ணமாய் வளர்ந்து
தமிழனவன் குருதி தோய்ந்த வாள்கள்
சாவண பிடிக்கப்பட்ட பூநகரிதனில்
கால் பதித்து வீரகாவியம் படைத்திட்ட
மாவீரன் ஆதிரையனுக்கு அவரது

ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப்பூக்களால்
அஞ்சலி செய்யும்,

அம்மா, சகோதர,
சகோதரிகள், நண்பர்கள்.

11-2-94 வெள்ளிக்கிழமை நினைவஞ்சலி நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

38, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(7487)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
23 - 05 - 1922

உதிர்வு
12 - 01 - 1994

திருமதி
**தில்லைநாதன் அன்னபூரணம் (பூமாது)**

அன்புடனும் பாசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து சிறப்புடன் வாழவழி நடத்தி கண்ணன் பாதாரவிந்தமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11-02-1994) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் கண்ணன் மெய்யன்பர்கள் அனைவரும் கலந்து மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மரணச் சடங்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'' செல்வி வாசம் ''
காளிகோவிலடி
கோப்பாய் வடக்கு.

தங்கள் பிரிவால் வாடும்
கணவன், மக்கள்,
மருமக்கள்.

(7482)


## PATRICIAN INSTITUTES
## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

ஃ பலரின் வேண்டுகோள்களுக்கிணங்கவும், தொழில் புரிவோரின் நன்மை கருதியும் எமது நிறுவனத்தில் இரவுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.
ஃ கணனித் துறையில் உறுதியான கல்வியைப் பெற எமது நிறுவனம் வழங்கும் ஓர் அரிய வாய்ப்பு

1. COMPUTER PROCESSING COURSES:

A. BEGINNER'S COMPUTER STUDIES
ஃ Duration: 4 Months

B. ADVANCED COMPUTER STUDIES
ஃ Duration: 6 Months

C. DIPLOMA IN COMPUTER STUDIES
ஃ Duration: 9 Months

ஃ Equipment Used: LASER XT/2, LASER XT/3, 386 and BITCOM Computers.
(IBM Compati bles)
(THEORY AND PRACTICALS)

COMMENCING DATE:
16-02-1994
WEDNESDAY
TIME: 6.30 p.m
WEEK DAYS & WEEKEND CLASSES

2. SPECIAL ENGLISH CLASS
இலக்கணத்துடன் க. பொ, த. (சா/த) மற்றும் சகல விதமான ஆங்கிலப் போட்டிப் பரீட்சைகளில் சிறந்த முறையில் சித்திபெறக் கூடிய வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.
ஃ Duration: 4 Months

3. SPOKEN ENGLISH CLASS:
ஆங்கில அறிவை சிறந்த முறையில் வளர்க்கவும், நன்றாக ஆங்கிலம் பேசவும் ஏற்ற வகையில் குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.
ஃ Duration: 3 Months

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன் உயர் கல்வி நிறுவனம்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-8592)

REGISTRAR
Patrician Institute of Higher studies
59, St. Patrick's Road,
Jaffna.

# "தமிழினத்தை இனியும் ஏமாற்ற முடியாது" வண. எஸ். ஜே.

**கடந்த புதனன்று மாலை யாழ்ப்பாணம் மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப் பணி இல்லத்தில் நடந்த கிறிஸ்தவ ஒன்றிப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் தெரிவித்த கருத்துகளின் தொகுப்பு இது.**

கிறிஸ்தவ ஒன்றிப்புக் கருத்தரங்கு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையத்தில் கடந்த புதனன்று மாலை நடைபெற்றது. நல்லெண்ண விஷயமாக யாழ்ப்பாணம் வந்த அங்கிளிக்கன் ஆயர் மேதகு கெனத் பெர்னாண்டோ, உடன் வந்தவர்களுடன் கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு அமைப்பாளர் குரு முதல்வர் எஸ். ஜே. இம்மானுவல் எழுந்திருந்து, ''யுத்தத்தினால் சீரழிந்திருக்கும் சிறிலங்காவில் கிறிஸ்தவர்களின் பங்கும் பணியும்' என்ற தலைப்பை என்னிச்சையாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்'' என்று அமைதியாகக் கூறினார். ''சென்ற வருடம் யாழ்ப்பாணம் வந்த ஆயர் கெனத் ஆண்டகை இரு சிங்கள யுத்தக் கைதிகளை விடுவித்துக் கொண்டு கொழும்பு சென்ற விவகாரத்துக்குப் பிறகு, இவர் பெயர் கொழும்புப் பத்திரிகைகளில் அடிக்கடி அடிபட்டது. இவரைப் பற்றி யாழ்ப்பாணத்திலும் பெருமையாகப் பேசிக்கொண்டார்கள். ஒரு வருட காலத்துக்குப் பிறகு நல்லெண்ண விஜயமாக மீளவும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்'' இவ்வாறு கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய குரு முதல்வர் எஸ். ஜே. இம்மானுவல் கூறினார். ஆயர் கெனத் ஆண்டகை பற்றிய அறிமுகம் இது.

## மேதகு கெனத் பெர்னாண்டோ

கருத்தரங்கில் முதன் முதலாக அங்கிளிக்கன் ஆயர் மேதகு கெனத் பெர்னாண்டோ பேசினார். அவர் பேசியதாவது:-

''கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு சமாதான அணியமைப்பை உருவாக்கி மக்களை அந்த அமைப்பில் இணைத்துக் கொள்ளுதல் நல்லது. கிறிஸ்தவர்கள் தமக்கிடையில் பேதம் இல்லாமல் செயலாற்ற வேண்டும். சர்வமதப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, வடக்கில் கிறிஸ்தவர்கள் இந்துக்களோடும், தெற்கில் கிறிஸ்தவ சமயத்தவர்கள் பௌத்தர்களோடும் பயனுள்ள தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கது. எனது கோரிக்கையை ஏற்று நற்சமிஞ்ஞையாகவிடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் இரண்டு யுத்தக் கைதிகளை விடுதலை செய்தார். அடையாளமாக சிறிலங்கா அரசும் தங்குதடையற்ற போக்குவரத்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுமதிக்கலாம் என்றார். இந்த நற்செய்தியை நான் தென் பகுதிக்கு எடுத்துச் சென்றேன். அறிவு ஜீவிகள் குழு ஒன்றுடன் யாழப்பாணம் வரலாம் என்று பிரயத்தனம் செய்தேன். ஆனால், பௌத்த பிக்குகள் இல்லாத அறிவு ஜீவிகள் குழு யாழ்ப்பாணம் வருவது பயன் அற்றது. காரணம் பௌத்த பிக்குகளின் கருத்துகளுக்குச் சிங்கள மக்கள் செவிசாய்க்கிறார்கள். தீர்வுக்குப் பௌத்த பிக்குகளின் ஆதரவுதான் பிரதானமானது. இப்போது காற்றுச் சாதகமாக வீசுகிறது. அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி என்னைக் கேட்டுள்ளார்'' என்றார்.

''சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் கில யோசனைகளை முன்வைப்பது கடமையாகும். மிக நெருக்கமாகவும், ஜாக்கிரதையாகவும்எடுக்கப்பட்ட முடிவுகள் இவை. முடிவுகள் என்சார்பிலும் அளிக்கப்படுகின்றன. இந்த முடிவுகள் குறித்துச் சபை ஆலோசனை கலக்க வேண்டும்'' என்றார்.

இந்த நிலையில் ஆறு அம்சத்திட்டமொன்றை கெனத் பெர்னாண்டோ பரிந்துரைத்தார். கருத்தரங்கு விசாலமான விரிவுரை அறைஒன்றில் நடைபெற்றது. ஆறு அம்சத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதியோ என்னவோ, அதனைக் கரும்பலகையில் எழுதவும் செய்தார்.

ஆறு அம்சத் திட்டம் வருமாறு:

- நல்லெண்ண விஜயம்,
- நற்சமிஞ்ஞைகள்.
- புத்திஜீவிகள் ஆலோசனை கலத்தல்.
- உத்தியோகபூர்வப் பேச்சுவார்த்தைகள்.
- ஆயுதங்களைக் கையளித்தல்.
- மனித உரிமைகள், மற்றும் ஜனநாயகத்தை மீளவும் நிலைநாட்டுதல்.

''ஆயுதங்களைக் கையளிக்காமல் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது, சபையினர் வேண்டுமானால் ஆறு அம்சத்திட்டத்துடன் வேறு அம்சங்களையும் சேர்த்துக் கொள்ளலாம்'' என்றார் ஆயர். ஆயுதங்களைக் கையளிக்கக்கூடாது என்ற பொதுக்கருத்து சபையில் நிலவியது.

## ஆயர் கிங்ஸிலி முத்தையா

விவகாரம் முடியவில்லை. இப்போதுதான் கருத்தரங்கு பெரிதாகிறது. அடுத்துப் பேசியவர் கொழும்பு மெதடிஸ்த திருச்சபை ஆயர் மேதகு கிங்ஸிலி முத்தையா. அவர் -

''எம்மை நாம் புரிந்துகொள்ளாவிட்டால் முன்னேற்றத்துக்கு இடமில்லை. புரிந்துணர்வு இல்லாவிட்டால் சிங்களவரும் தமிழரும் கைகோர்த்து வாழ முடியாது நேசக்கரம் நீட்ட நாட்டமுள்ளவர்கள் சிங்களவர் மத்தியிலும் இருக்கிறார்கள். ஆனால் சிங்களவரின் பிரச்சினைகளைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்கிறார்களில்லை. பல்கலைக்கழக அனுமதியா? அது சின்ன விஷயம். விவசாயிகள், மீனவர்கள் பிரச்சினையை நீங்கள் முன்னெடுக்க வேண்டும். சிறிதளவு - சுமார் ஐந்து விகிதம் தமிழர்கள் தான் பல்கலைக் கழகம் போகிறார்கள் படிப்பு முடிந்ததும் அவர்களும் வெளிநாடு போய் விடுகிறார்கள்.

''தமிழரின் உணவு மற்றும் அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை முனைப்பாக்க வேண்டும். தமிழரின் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். சுயநிர்ணய உரிமை போன்ற சொற்பிரயோகங்களை முன்வைக்கக் கூடாது. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அது எதிர்ப்புணர்ச்சியைத்தான் அதிகரிக்கச்செய்கிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் எமக்கு ஒரு பணிச்சுமை உள்ளது. கிறிஸ்தவர்களான நாம் இனங்களுக்கிடையிலான எதிர்ப்புணர்ச்சிகளை அகற்றுவதற்கான மத்தியஸ்தர்களாக, மருத்துவிச்சிகளாகச் செயல்பட வேண்டும். சிங்களக் கிறிஸ்தவர்கள் பண்பாட்டு ரீதியாகச் சிங்களப்பௌத்தர்களோடு இணைந்து செயலாற்றுவது அவசியம். அதேபோல் தமிழ்க் கிறிஸ்தவர்கள் இந்துப் பண்பாட்டுக் கோலத்தோடு இணைய வேண்டும். இப்படி யோசிப்பதுகூடக் கஷ்டமான காரியமாகப் படலாம். சிங்களவரின் பிரச்சினைகளை அங்கீகரிப்பதுடன் தமிழரின் பிரச்சினையையும் அங்கீகரிக்க வேண்டும். ஆகவே, தமிழ்க் கிறிஸ்தவனாகிய நான் ஆயர் கெனத் பெர்னாண்டோவின் பின்னால் நிற்கிறேன். தமிழர்களாகிய நாம் ஒரு தீர்வுத் திட்டத்தைத் திணித்து விடுவோம் என்று பெரும்பான்மை இனம் அஞ்சுகிறது. இருப்பினும் பேச்சு வார்த்தைக்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். ஆயர் கெனத் பெர்னாண்டோ முன்வைத்துள்ள ஆறம்சத்திட்டம் நல்லதொரு ஆரம்பமாகும்.'' என்று முடித்தார் ஆயர் கிங்ஸிலி முத்தையா, அவருடைய சொற்பொழிவு தேநீர்க் கோப்பையில் புயலைக் கிளப்பியது. ஆயர் கிங்ஸிலி முத்தையா கிளப்பிய புயல் இன்னும் ஓயவில்லை.

## சபையின் கருத்து

இனி, வயதில் மிகவும் மூத்தவரான வண. டொனால்ட் முத்தையா பேசினார்:-

தமிழர் - சிங்களவர் பிரச்சினைக்கு விவிலிய அடிப்படையில், மத அடிப்படையில் தீர்வில்லையா? இனப் பிரச்சினைக்கு மேற்கத்தேய அணுகு முறையிலான தீர்வு எம்மை ஓரங்கட்டிவிடும். இது மனிதப்பிரச்சினை. மனிதாபிமான முறையில் தீர்க்கப்பட வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் எனது பங்கு மக்கள் மத்தியில் சமாதானத்தீர்வு குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறேன்'' என்று ஆதங்கம் தெரிவித்தார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட மதகுருவாகள் அங்கிளிக்கன் ஆயர் மேதகுரு கெனத் பெர்னாண்டோவின் ஆறு அம்ச முன்வரைவு மற்றும் மெதடிஸ்த ஆயர் மேதகு கிங்ஸிலி முத்தையாவின் உரை பற்றி பலவாறாகவிவாதித்தார்கள்.

வண. டொமினிக் அடிகளார் பேசும்போது, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் ஆயர்களைப் பார்த்து ''நீங்கள் ஜனாதிபதியுடன் தமிழர்கள் பிரச்சினை குறித்துப் பேசினீர்களா? அப்படியானால் அதற்கு அவர் அளித்த பதில் என்ன? கடந்த வருடம் நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும்போது நம்பிக்கையுடன் வந்தீர்கள். என்ன முயற்சிகள் கொழும்பில் மேற்கொண்டீர்கள்? அஸ்கிரிய-மல்வத்தைப் பீடாதிபதிகளின் நம்பிக்கையைப் பெறாமல் நீங்கள்சமாதானத்துக்கு உத்தரவாதம் தரமுடியுமா? நாங்கள் இன்று ஒரு புராதன உலகில் வாழ்கிறோம். சிலர் எமது துன்பங்களைப் பார்க்க மறுக்கிறார்கள். சிலர்கண்டாலும் கண்டுகொள்ளாதது போல் பாவனை செய்கிறார்கள். சுதந்திரத்துக்கும் எமக்கும்இப்போது பஞ்சம் ஏற்பட்டுள்ளது. துன்பப்படுகிறவர்களுடனும், ஏழைகளுடனும் எம்மை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். அதுதான் கிறிஸ்தவ அணுகுமுறை. மற்றவர்கள் வழங்கிய உணவை நாம் பகிர்ந்து கொடுக்கிறோம். அது சேவையாகுமா? ''என்று வினாவினார்.

முதல் குண்டு வீசுவதை அரசு நிறுத்த வேண்டும், ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி நீங்கள் ஏன் அரசைக் கேட்கக் கூடாது. அரசும் யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப் படுத்த வேண்டும். பல்கலைக்கழக அனுமதி என்று ஒரு பிரச்சினை மாத்திரம் தமிழர்களுக்கு இல்லை. இந்தவிஷயம் பல பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டது. முதலில்இந்தியத் தமிழர்களில் வாக்குரிமையில் கைவைத்தார்கள். பின்பு மொழி திணிக்கப்பட்டது. பிறகு தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள். தொடர்ந்தாற்போல் பல்கலைக்கழக அனுமதி'' என்றார் தென் இந்தியத் திருச்சபைக் குருவானவர்.

''பொதுசனத் தொடர்புத் துறைகளும் தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறிவிட்டன. அதுஇன்றுசகசமாகிவிட்டது. செய்தியைச்செய்தியாகப்பிரசுரிக்கக் கிறிஸ்தவசமயப் பத்திரிகைகள் கூடத் தவறிவிட்டன. போரினால் ஏற்படும் விளைவுகளால் தமிழ் மக்கள் மாத்திரமல்லசிங்கள சிப்பாய்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுவார்கள்'' என்றார். வண எஸ். எம் செல்வரெட்ணம் தொடர்ந்து அவரே ''எமது கல்வி முறையில் தவறுகள் இருப்பதால்தான் இனவாதம் தலைதூக்கியுள்ளது என்று பல்கலைக் கழக சிங்களத் துறைப் பேராசிரியர் பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. இந்தப் பின்னணியை மாற்ற நீங்கள் முயற்சிக்கவேண்டும்'' என்று தமது குமுறல்களைக் கொட்டினார்.

சுயநிர்ணய உரிமை எமது உரிமை. எமது உரிமையை வழங்கினால்தான் நாம் சிங்களவருடன் சினேகமாகவாழ முடியும். இல்லாதுபோனால் நாம் சிங்களவருடன் சகஜமாக வாழ்வது கடினம். எங்கள் மேல் ஏன் குண்டு போடுகிறார்கள் என்று அப்பாவி மக்கள் கேட்கிறார்கள். இதைத்தான் நானும்ஆயர். கெனத்பெர்னாண்டோவிடம் கேட்கிறேன்'' என்று விவரித்தார் வண. றெஜினோல்ட்

''ஆறு அம்சத்திட்டத்தில் உள்ள ஆயுதங்களைக் கையளித்தல் என்ற விஷயம் பற்றி முடிவு செய்யவேண்டும்- ஆயுதங்களைக் கையளித்தல்என்ற பேச்சிற்கே இடமில்லை ஆயுதங்களை கையளித்தல் என்ற நிபந்தனையை ஆறு அம்சத்திட்டத்தில் இருந்து நீக்கிவிடவேண்டும். இதனால் நாம் வன்முறையை ஆதரிக்கிறோம் என்று அர்த்தமில்லை ஆயுதமில்லாமல் பேச்சுவார்த்தைக்குப் போனால் ''எம்மைப் பலவீனப்படுத்திவிடுவார்கள். ஆயுதங்களைக் கையளிப்பது. சமயக் கோட்பாட்டில் சரியாகப் படலாம் ஆனால், அரசியல் அடிப்படையில் அப்படிச் செய்வது பொருத்தமற்றது.'' சபையில் இருந்தவர்கள். கொழும்பு ஆயர்கள் முன்னிலையில் வீசிய கருத்துக்கள் இவை.

## பதிலுரைகள்

- மேற்படி விவகாரங்களுக்கு மெதடிஸ்த திருச்சபை ஆயர் மேதகு கிங்ஸிலி முத்தையா தந்த பதில்:-

''பொன்னம்பலம் இராமநாதன் தேர்தலில் சிங்கள வேட்பாளரை வென்றார். சிங்களவரும் அவருக்கு வாக்களித்தார்கள். அதற்குத் தமிழர்கள் என்ன கைமாறு செய்து விட்டார்கள்? டொனமூர் யாப்புக்கு முன்னர் எஸ். டப்பிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா மூன்று மாகாணத் திட்டத்தை முன்வைத்தார். அதனைத் தமிழ்த் தலைவர்கள் அப்போது வன்மையாக எதிர்த்தார்கள். ஜி. ஜி. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டார். இது நியாயமாகப் படுகிறதா? இன்று தமிழ் அரச கரும மொழியாக்கப்பட்டுள்ளது இவ்வாறு தான் சிங்கள மக்கள் கேட்கிறார்கள்''.

திடீரென்று குழு முதல்வர் எஸ். ஜே. இம்மனுவல் குறுக்கிட்டு, ''உண்மை எங்களுக்குத் தெரியும்'' என்றார்.

அடுத்தாற்போல் அங்கிளிக்கன் ஆயர் மேதகு கெனத் பெர்னாண்டோ,

ஆறு அம்சத் திட்டத்தைப், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு பூர்வாங்க தந்திரோபாயமாக நாம் முன்னெடுக்க வேண்டும். ஆறு அம்சங்களையும் தொடர்ச்சியாகத் தந்திருப்பதில் சில முக்கியத்துவங்கள் உள்ளன. ஆறு அம்சத் திட்டத்தில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் கருத்து வித்தியாசங்கள் உள்ளன. ஒன்றுடன் தொடங்கி படிப்படியாக நாம் மற்ற அம்சங்களையும் அணுகலாம். ஆயுதங்களைக் கையளிப்பது என்பது எதார்த்தமான தல்லத்தான். ஆயுதங்களைக் கீழே வைப்பது, அதனை உபயோகிக்கக் கூடாது என்றுதான் நான் கருதுகிறேன்'' என்று விபரித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இப்போதுதமிழர்பிரச்சினையில் முன்னேற்றம் காணப்படுகிறது. அண்மையில் கொழும்பில் வண. வல்பொல ராகுல தேரர் தலைமையில் புத்திஜீவிகள் கூடித் தமிழர் பிரச்சினை பற்றி ஆலோசித்ததாக இங்கிருந்து அறிகிறேன். இப்போது யாழ்ப்பாணத்தில்பொருள்கள் கிடைப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அப்பியாசக் கொப்பிகள் கூடப் பரவலாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நிலவும் விலைவாசிகளைப் பற்றி அறிந்து வரும்படி அரசாங்கம் என்னைக் கேட்டுள்ளது என்றார்.

**தொகுப்பு: மதன்**

## வண. எஸ் ஜே. இம்மனுவல்

முடிவில கருத்தரங்கின் அமைப்பாளர் குருமுதல்வர் வண. எஸ். ஜே. இம்மனுவல் எழுந்து, ''நாம் ஒரு தவறான பார்வையில்தான் விஷயத்தை அணுகி வருகிறோம். அதற்கு நாமும் பொறுப்பேற்க வேண்டும். ஆங்கிலேயர் வருகைக்குமுன் இலங்கையில் இரண்டு இராச்சியங்கள் இருந்தன. ஆங்கிலேயர் வருகையினால் நிர்வாக காரி

(10ஆம் பக்கம் பார்க்க)

வெளிவாரிப் பட்டப்படிப்பு:

# முதலாம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகள்வெளியாகின

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவின் கலை முதற் தேர்வு, வர்த்தக முதற்தேர்வு ஆகியவற்றின்பெறுபேறுகள்நேற்று திட்டமிட்டபடிவெளியாகின.

இம்முறை கலை முதற் தேர்வில் 156 பேரும், வர்த்தக முதற்தேர்வில் 64பேரும் சித்தியடைந்துள்ளனர். இதன்படி கலை முதற்தேர்வில் சித்தியடைந்தோர்சுட்டெண்கள் வருமாறு:

ஏ,92007, 92011, 92014, 92015, 92016, 92017,92019, 92023, 92024, 92025, 92028, 92036, 92037, 92039, 92041, 92043, 92044, 92047, 92054, 92058, 92060, 92062, 92063, 92073, 92078, 92080, 92081, 92083, 92085, 92064, 92094, 92099, 92107, 92109, 92111, 92112, 92116, 92117, 92120, 92122, 92126, 92127, 92128, 92131, 92134, 92135, 92147, 92151, 92153, 92158, 92159, 92160, 92164, 92166, 92168, 92171, 92174, 92175, 92178, 92179, 92183, 92191, 92193, 92194, 92195, 92201, 92204, 92209, 92211, 92213, 92218, 92220, 92221, 92224, 92226, 92237, 92239, 92241, 92243, 92245, 92248, 92249, 92256, 92258, 92264, 92266, 92285, 92286, 92287, 92297, 92298, 92302, 92310, 92316, 92322, 92323, 92327, 92328, 92330, 92331, 92351.

ஆர். ஏ. 91012, 91036, 91077, 91167, 91176, 91246, 91260, 91263, 91268, 91274, 91344, 91411, 91423, 91429, 91434, 91456, 91551, 91577, 91639.

ஏ. 92018, 92022, 92056, 92079, 92092, 92095, 92152, 92154, 92163, 92172, 92182, 92225, 92238, 92242, 92261, 92279, 92292, 92304, 92309, 92317, 92324, 92326, 92347.

ஆர். ஏ.91019, 91161, 91195, 91313, 91362, 91393, 91407, 91268.

வர்த்தக முதற்தேர்வில் சித்தியடைந்தோர் சுட்டெண்கள் வருமாறு:

சி. 921002, 921003, 921008, 921010, 921013, 921017, 921018, 921019, 921020, 921023, 921024, 921038, 921041, 921051, 921052, 921058, 921059, 921065, 921070, 921073, 921080, 921081, 921083, 921087, 921088, 921090, 921094, 921095, 921096, 921097, 921098, 921099, 921102, 921104, 921107, 921109, 921110, 921118, 921120, 921121, 921122, 921123, 921125, 921135, 921138, 921141, 921150, 921151, 921014, 921044, 921046, 921063, 921074.

ஆர். ஏ.911044, 911071, 911087, 911096, 911119, 911132, 911074, 911088, 911122, 911129, 911212.


உ

## தசாகாதி அழைப்பிதழ்

### இ. இராசலட்சுமி அம்மா
(சின்னக்குரு அம்மா)

15 - 2 - 1994 - தசாகம்
16 - 2 - 1994 - ஏகோதிஷ்டம் மாசிகம்
17 - 2 - 1994 - சபிண்டீகரணம்
18 - 2 - 1994 - கிருஹயக்ஞம்

18 - 2 - 1994 வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.

சாரதாபீடம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (7486)



வடமராட்சி மென்பான விற்பனையாளருக்கு

## ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. சாயி கிருஷ்ணா, வதிரி சந்தி, நெல்லியடி.
2. வேலவன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை.



TASTE LINE
INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
JAFFNA.


## மெய்வல்லுநர் போட்டி

யாழ். மத்திய கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00மணிக்கு கல்லூரி விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. யாழ், நல்லூர் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## திறப்பு விழா

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்க பணிமனை இன்று மாலை 6-30 மணிக்கு கன்னாதிட்டி வீதி, யாழ்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை உறுப்பினர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர்.

### எதிர்கட்சிகளுக்கு

என அவர் மேலும் கூறினார்

தென் மாகாண சபை தேர்தல் முடியும்வரை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகள் ஈடுபடுவதற்கு ஐ.தே.க. அரசாங்கம் தடை விதிக்கிறது. ஆனால் ஆளும் கட்சியினர் பிரசாரங்களை அரச பணத்தில் அரசாங்க வைபவங்கள் என்ற பெயரில் நடத்தி வருகிறது.

தென்மாகாணசபைக்கான தேர்தல் பிரசாரங்களைத் தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் நடாத்தி வருகிறது என சிறிமாவோ பண்டாரநாயக்கா மேலும் கூறினார்.

### தமிழினத்தை

பங்களுக்காக மாத்திரம் ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டது. கொழும்பில் ஆங்கிலம் படித்த உயரிகள் மத்தியில் ஐக்கியம் நிலவியது. அந்த ஐக்கியம்கிராமங்களை எட்டவில்லை. இதனை பண்டாரநாயக்காவும் உணர்ந்திருந்தார். சமாதானம் பற்றிய எமது கருத்து வித்தியாசமானது. டொனமூர். சோல்பரி யாப்புகள் தமிழ் மக்களின் உரிமைகளையும். இன ஐக்கியத்தையும் தரவில்லை. ஏதோ ஐக்கியம் நிலவுவதாக சிங்களவர் அனுமானித்துக் கொண்டார்கள். அவ்வளவுதான்! என்றார்.

வண. இம்மனுவல் தொடர்ந்தார்:-

''டி.எஸ். சேனநாயக்கா ஆங்கிலம் படித்த கிறிஸ்தவர்களின் பின்னணியில் கருமமாற்றினார். ஆனால் ஐக்கியத்திற்காக எவரும் பணியாற்றவில்லை. இனியும் பழைய பிழையைநாம் விடக்கூடாது. மூத்த கிறிஸ்தவர்களாகிய எமக்கிடையில் கூட ஐக்கியம் இல்லை. அப்படியிருக்க சாதாரண சிங்களவர் மற்றும் தமிழர்கள் மத்தியில் அதை எவ்வாறு எதிர்பார்ப்பது? எமது உரிமைகள் மதிக்கப்படவேண்டும், உரிமைகள் வழங்கப்பட வேண்டும். நிர்வாக ஐக்கியம் பயனைத் தரப்போவதில்லை. அதிகபட்ச சுயாட்சி தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டும். கிறிஸ்தவர்களாகிய எமக்குத் தெளிவான பார்வை அவசியம். இளைஞர்கள் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை. இதனால் நான் பலாத்காரத்தை அனுமதிக்கிறேன் என்று அர்த்தம் பண்ணிவிடக்கூடாது. நாற்பது வருடங்களாகத் தமிழினம் ஏமாறி விட்டது. இனியும் ஏமாற்ற முடியாது. அழிந்தது போக எஞ்சியுள்ள தமிழ் மக்களாகிய எமக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. நாங்கள் உங்களுடன் கைகோர்க்கத் தயார். ஆனால், எங்களது உரிமைகளை வழங்குங்கள்'' என்றார் மாலை4மணிக்கு ஆரம்பித்த கூட்டம் 6 மணிக்கெல்லாம் முடிவடைந்தது.

## பிரிட்டிஷ் பா. உகள் சோமாலியாவில் கடத்தல்

(லண்டன்)

சோமாலியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடத்திச் செல்லப்பட்டார்கள்.

கொன்சர்வேட்டிப் கட்சியைச் சேர்ந்த மார்க் றொபின்சனும், எதிர்க்கட்சியான தொழிற் கட்சியைச் சேர்ந்த ரொனியும் சோமாலியா வந்திருந்தார்கள். அவர்களுடன் கடத்திச் செல்லப்பட்ட பெண் பத்திரிகையாளர் ஒருவர் விடுவிக்கப்பட்டார் இவர்கள் துப்பாக்கி நபர்களால்கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 'ஆதாரம்' வெளிவந்துள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞானம் ஆய்வு இதழான ஆதாரம் 11ஆவது இதழ் தை-மாசி மாத வெளியீடாக வெளிவந்துள்ளது

இந்த இதழானது தமிழீழ தேசியத்தலைவரின் பொருண்மிய சிந்தனையை தாங்கி கலாநிதி பால சிவகடாட்சம் அவர்களின் வெள்ளாண்மை அன்றும், இன்றும் தமிழீழத்தில் உள்ளூர்ஊைத் தொழிலான பசும்பால் உற்பத்தியும் அதன் அரசியல் பொருண்மிய விளைவுகளும் செ. விக்கினேஸ்வரன் அவர்களின் விவசாய இரசாயனங்களும் விளைவுகளும் எனும் ஆய்வு கட்டுரைகளையும், இரட்டை சூட்டடுப்பு பற்றிய கடிதங்கள், கேட்டு அறிந்தது. காமதேனு கால்நடைப் பண்ணையை நேரிலே பார்த்தது போன்ற விடயங்களையும் கவிதைகள் மற்றும் வழமையான அம்சங்களையும் தாங்கிய இதழாக வெளிவந்துள்ளது.

### உணவுப்

அவர் தெரிவித்தார்:

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இது தொடர்பாக இன்னும் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவில்லை என்றும், ஏற்கனவே அரசாங்கம் பேச்சளவில் ஒத்துக் கொண்டதாகவும், ஆனால் அதனை நடைமுறைப்படுத்த முயற்சிசெய்யவில்லை எனவும் தெரிவித்தார்.

## விளையாட்டு போட்டி

(வடமராட்சி)

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. செ. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் கலந்து கொள்கிறார்.

(யோ)

## இந்திய புலமைப் பரிசில்

(கொழும்பு)

இந்திய அரசின் புலமைப் பரிசில்களை பெறும் மாணவர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை உயர்கல்வி அமைச்சு கோரியுள்ளது. க. பொ. த. உயர்தரப் பரீட்சை அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளையும், நான்கு பாடங்களிலும் அறுபது வீதத்திற்கு குறையாத புள்ளிகளையும் பெற்றிருப்பதுடன் க. பொ த. சாதாரணதர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தியும் பெற்றிருப்போர் இப்புலமைப் பரிசிலைப் பெற விண்ணப்பிக்க முடியும்.

### விமானப்

புக்காரா ரக குண்டு வீச்சு விமானங்கள், எவ் 7 ரக மிகை ஒலி வேக விமானங்களும், பெல், எம் ரக உலங்கு வானூர்திகளும் அவ்ரோ விமானங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10.02.1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 712

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3114, 26-3741, 26-6274, 27-3863, 27-2761, 42-1722, 26-4648, 26-9797, 28-2345, 24-0336, 41-9355, 26-3690, 26-6796, 28-3476, 24-8391, 26-4727, 26-7663, 26-0032, 28-6640

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-1250, 27-5845, 24-0422, 26-4281, 41-9211 24-2655, 27-9416, 24-5623, 26-2277, 24-5912, 24-5509, 28-1414, 28-9917, 24-4481, 24-5437, 24-6280, 27-8164, 24-5942, 27-5121, 28-0882, 26-2108, 24-5461, 26-6264, 42-1182, 40-1688, 27-4024, 26-6568.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

## ஸ்ரீதர் திரையில்

## Rescue Team

தினசரி மாலை:- 4-00, 6-00 மணி.
சனி, ஞாயிறு:- காலை 10-30,
பி. ப. 2-30, 4-00, 6-00 மணி.

இத்துடன் டிசம்பர் மாத ஒளிவீச்சும் காண்பிக்கப்படும். (-7494)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.